

# தொண்டன்

மாறாத சோகத்தில் மிதக்கவிட்டு
மண்ணுக்குள் கண்துஞ்சப் போனாயோ நீ?
கூறுகி இதயங்கள் கொட்டும் குருதி
குணக்குன்றே நீ வாழ்ந்த பெருமை சொல்லும்
ஊர்வாழ உழைத்த நின் முடிவு கேட்டு
உயிர் வாழும் ஆசையும் விட்டுப் போச்சே
வேரோடு சாய்ந்தவைகள் மரங்களல்ல
விம்மியழும் மனங்களும் நம்பிக்கைகளுமே.

ஆடி - 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4-50

# தொண்டன்

ஆடி - 1988

மலர்: 20 இதழ்: 05

□★□

ஆசிரியர் :

ப். ஜோசப்

இணை ஆசிரியர் :

மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :

எஸ். லோகநாதன்

ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :

சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்.

தொடர்பு :

சமூகத் தொடர்புகள் நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை :

தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-

உள்ளே . . .

1. உங்களோடு கொஞ்சம் ...1
2. ஆயர் விடுத்துள்ள அறிக்கை...2
3. நெஞ்சம் கொதித்ததம்மா ...3
4. ஆணவம் விளைத்த அழிவு ...4
5. கண்ணீர் அஞ்சலிகள் ...8
6. இறுதி அஞ்சலி ...9
7. காகிதம் புது எழுச்சி பிறக்கட்டும் ...12
8. தொடர் கதை ...13
9. கவிஞர்வைரமுத்துபைபிள்...16
10. சுமைதாங்கி சாய்ந்தால் ...17
11. நடந்தது என்ன? ...19
12. ரொரன்ரோ மாநகரில் ...21
13. மாணவர் பக்கம் ...23
14. மஞ்சு நீ மழைமுகில் அல்ல ...25
15. விவிலியப் புதிர் - 2 ... 27

**எழுதுங்கள்!**

கிறீத்தவ - சமூகச் சிந்தனைகளைக் கொண்ட ஆக்கங்களைத் தொண்டன் எதிர்பார்க்கின்றான்,

புதிய சிந்தனைகளுக்கு - புதிய ஆக்க முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கத் தொண்டன் காத்திருக்கிறான்.

எழுதுங்கள்! ஏற்றவையாயின் பிரசுரிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு கொஞ்சம்...

''**எனக்கு** ஓர் உடலை நீயே தந்தாய் - அதை உனக்கே பலியாக அர்ப்பணிக்கின்றேன்'' என்று, தன்னை அழைத்த அண்ணல் இயேசுவின் அடிச்சுவடுகளை அனுதினமும் பின்பற்றித் தன்னையே உயிர்ப்பலியாகக் கொடுத்த **அருட்திரு. சந்திரா அடிகள்,** குருத்துவத்தின் மேன்மையை எண்பித்து விட்ட பெருமையினைப் பெறும் ஒரு குருவாகத் திகழ்கின்றார்.

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பதைத் தன் விருதுவாக்காகக் கொண்டு இன மத மொழி வேறுபாடின்றி அண்டி வந்தோரை அன்புடன் அரவணைத்து, இன்னலுற்றவர்களின் இடர்களைக் களைய அல்லும் பகலும் அயராது உழைத்த அண்ணல் அவர் ஒரு மக்கள் தொண்டன் என்று கூறுதல் மிகையாகாது.

''போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும் ஏற்றதொரு கருத்தை எடுத்துரைப்பேன் எதுவரினும் அஞ்சேன் என்றுரைத்து எத்தனை ஆயிரம் எதிர்ப்புக்கள் வந்தபோதும் எதிர்த்து நின்று எதிர்நீச்சல் போட்ட வீரத்திருமகனைத் தமிழ் அன்னை ஈன்றெடுக்க என்ன தவம் செய்தாளோ!

தன்னலமின்றித் தற்பெருமையின்றித் தன்னையே வெறுமையாக்கி தாராள சிந்தையுடன் தான் உருகிப் பிறருக்கு ஒளி வழங்கும் மெழுகுவர்த்தி எனத் தன் வாழ்வையே உருக்கி மக்களுக்காக உயிர்த்தியாகம் செய்து விட்ட அன்னார் ஒரு தியாகியேதான்.

''மக்கள் பணியே மகேசன் பணி'' என மக்கள் அனைவருக்கும்

நல்ல தந்தையாக<br>
நல்லாசிரியராக<br>
நற்சேவகனாக<br>
நல்லாயனாகப் பணி புரிந்து<br>
மக்கள் நெஞ்சங்களிலே ஆழமாகப் பதிந்து விட்ட<br>
மக்கள் தலைவன் சந்திரா அடிகளின் இறப்பு<br>
மனித குலத்துக்கே ஓர் பேரிழப்பு.

சந்திரன் இல்லாத நாட்கள் அமாவாசை என்பர். அருட்திரு. சந்திரா இல்லாத நாங்களும் அமாவாசை போன்றதொரு இருள் சூழ்ந்த, வெறுமையுற்ற நிலையினை உணர்ந்தாலும் கிறிஸ்து பெருமானின் வார்த்தைகள் இத் தருணத்தில் எமக்கு நம்பிக்கையை ஊட்டுகின்றன.

''கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது பலன் தராது'' என்று கிறிஸ்து கூறுகின்றார்.

ஆம், அன்னாரின் இறப்பு ஆயிரமாயிரம் குருக்களையும், தியாகிகளையும், தொண்டர்களையும், வீரத் தமிழ் மக்களையும், மக்கள் தலைவர்களையும் எம்மத்தியிலே உருவாக்கத்தான் போகின்றது. இதுவே எமது நம்பிக்கை.

இந்த நம்பிக்கைத் தீ பரவட்டும் என வாழ்த்துகிறோம்.

**பி. ஜோசப்.**

---




**உங்களுக்கென நீதியை விதையுங்கள், அன்பை அறுவடை செய்யுங்கள்.**

ஓசே. *10 / 12.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்திரு. சந்திரா பெர்ணுண்டோ அடிகளார் மரணம் குறித்து, திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் விடுத்துள்ள அறிக்கை.

கிறீஸ்துவுக்குள் அன்பானவர்களே !

கிறீஸ்துவின் அன்பும், ஆசீரும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக !

எமது மறை மாவட்டத்தைச் சேர்ந்த குருவான அருட்திரு. சந்திரா பெர்ணுண்டோ அடிகள் படுகொலை செய்யப்பட்ட வேதனையான நிகழ்ச்சியை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

எமது மறை மாவட்டத்தில் - இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் எமது மக்களுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றிய ஒரு நல்ல குரு அவர். சமாதானத்துக்காகவும், நீதிக்காகவும் போராடிய கடவுளின் மகன்.

வன்முறையாளரினுல் இவர் கொல்லப்பட்டது, துயரம் தோய்ந்த ஒரு நிகழ்ச்சி மட்டுமல்ல; வன்முறை, மனித மாண்புக்கும், மக்கட் சமுதாயத்திற்கும் எத்துணை பெரிய எதிரியாக, சவாலாக, எழுந்து நிற்கின்றது என்பதற்கு உறுதியான ஓர் எடுத்துக் காட்டு மாகும். மனிதாய நேசங்கொண்ட எவரும் இத்தகைய கொடூரச் செயல்களை அனுமதிக்க மாட்டார்கள். மனித நாகரீகத்திற்கும், மக்களின் நலன்களுக்கும் விரோதமான வன்முறைச் செயல்கள் கண்டிக்கப்படவேண்டும்; நிறுத்தப்படவேண்டும்.

இந்த அநீதச் செயலால் நாம் தளர்ந்துவிடவோ, அவநம்பிக்கையடையவோ கூடாது. மாருக, மேலும் அதிக ஒற்றுமையுடனும், தியாக சிந்தையுடனும், விழிப்புணர்வுடனும் வாழவும்; சமூக நீதிக்காகவும், சமாதானத்துக்காகவும், மனித மேம்பாட்டிற்காகவும் உழைத்திடவும் முன்வர வேண்டும்.

அண்மைக் காலங்களில் கிழக்குப் பகுதியில், மக்களுக்காக உழைக்க முன்வந்த தலைவர்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் கொல்லப்படுவதன் காரணம் என்ன? மக்களுக்காகச் சேவை செய்பவர்களை அழித்தொழிப்பதின் அர்த்தம் என்னவென்று எமக்குப் புரியவே இல்லை.

அருட்திரு. சந்திராவும் ஒரு குருவாக, ஆலயக் கடமைகளோடு, தன் பணியை நிறுத்திக்கொண்டிருக்கலாம். ஆனுல், அவர் அவ்வாறு செய்யவில்லை. ஒரு நிறைவான குருவாக வாழ விரும்பிய அவர், மக்கள் படும் துயர் கண்டு, யாருமே செய்யத் துணியாத - முன்வராத சமூகப் பணிகளில் ஈடுபட்டவர். அவர் வன்செயல்களில் ஈடுபட்டவரல்ல. அப்படியாயின் அவரை ஏன் கொன்ருர்கள்? அவர் செய்த குற்றமென்ன? குற்றமிருப்பின் வேறு வழிகளில் அவரைக் கண்டித்திருக்கலாமே !

கடவுளின் மனிதனுக இருந்து, மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒருவரைக் கொன்ற காரணத்தை இன்றுவரை அறியாமல் கலங்குகின்ருேம். காரணத்தை இதுவரை யாருமே தெரிவிக்காமல் இருப்பது எமக்கு மனவேதனையைத் தருகிறது.

'' நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்ருேர்; ஏனெனில் விண்ணரசு அவர்களதே!'' என்னும் கிறீஸ்துவின் வார்த்தைக்கொப்ப ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, சமூக நீதிக்காக உழைத்து, உயிரிழந்த அருள்திரு. சந்திரா அடிகள் மிகுந்த கைமாறு பெறுவார் என்ற விசுவாசம் எமக்குத் துன்பத்திலும் ஆறுதல் தருகின்றது.

அவரது ஆன்மா சாந்தி பெற அனைத்துமக்களையும் மன்ருடுமாறு
கேட்டுக் கொள்ளுகின்ருேம்.


கிறீஸ்துவில் அன்புள்ள,

+ Kingsley Swampillai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் கொதித்ததம்மா! நெடுமூச்சு வந்ததம்மா!



" களப்பூர்க்கவிஞன் "

நெஞ்சம் கொதித்த தம்மா !
நெடுமூச்சு வந்த தம்மா !
வஞ்சகப் பேய்தான் செய்த
வன்முறைக் கொடுமை யாலே
அஞ்சாத நெஞ்சன் 'சந்ரா'
அடிகள் ஆவி நீத்த
சஞ்சலச் செய்தி நெஞ்சில்
சரமாகப் பாய்ந்த தம்மா !

பிரச்சினை மலிந்த வேளை
பிரஜைகள் குழுவைக் காத்துக்
கரைகாணுக் கப்பல் போன்றே
கலங்கிய மக்கட் கெல்லாம்
கரையினைக் காட்டி நிற்கும்
கலங்கரை விளக்காய்த் தோன்றி
உரையினில் அடங்காத் தொண்டு
ஊரெலாம் போற்றச் செய்தான்.

கண்டவர் கருத்தும் கண்ணும்
கவர்வதில் காந்தம் போன்றேன்
"தொண்டுதான் தொழுகை" என்றே
தொல்லைகள் நீக்கி நின்ருன்
குண்டுதான் துளைத்த போதும்
கொண்டதன் கொள்கை நின்ருன்
மண்டலம் விட்டுத் தெய்வ
மாளிகை நோக்கிப் போனுன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணவம் விளைத்த அழிவு...,

## பலியானுர் அருட்தந்தை சந்திரா பெர்ஞண்டோ



“ மண்ணில் மகுடத்திற்கு மவுசு
மயங்கிய மனித முகங்கள்பல தினுசு
அதிகார ஆணவம் விளைத்தது மாபாதகம்
தார்மீகம் தடை புரண்டால்
தண்டனையில் இறைவனும் தப்புவாரில்லை.”

இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசு பெருமானுக்கும் நடந்து முடிந்த கதை. இன்று நாம் வாழும் இவ்வுலகிலே

“ நீதியின் பாதையில் பேதங்கள்
நிர்க்கதியானது வேதங்கள்
சொர்ப்பனமான நம் வாழ்க்கைக்கு
அர்ப்பணமாகினுர் அருட்தந்தை சந்திரா ”

**✶ போதகர் K. இயேசுராசா ✶**

மட்டக்களப்பு மாவட்டத்தைப்பொறுத்த மட்டில் 1988 ஆனி மாதம் 6ம் நாள் ஓர் கசப்பான நாள். அன்று தான் கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த அனைத்து மக்களும் ஆசித்து பூஜித்து வந்த அணையாஜோதி அருட்திரு. சந்திரா பெர்ஞண்டோ அடிகள் அகால மரணமானுர். மரணச் செய்தி கேட்ட மக்களால் இச் செய்தியை நம்ப முடியவில்லை. காரணம் சந்திராவுக்கும் எதிரிகள் இருக்கிருர்களா? அப்படியென்ருல் அவர் எப்பவோ செத்திருக்கவேண்டும், சந்திராவைக்கொல்ல யாருக்கு மனம் வரும்? சந்திரா செத்துவிட்டால், செத்துக்கொண்டிருப்பவர்களுக்கு யார் உயிர் கொடுப்பது? இது உண்மையாக இருக்க முடியாது, ஒருபோதும் உண்மையாக இருக்க முடியாது என்றுதான் மக்கள் நினைத்தார்கள். நிகழ்ந்ததை அறிய ஆவல் கொண்ட மக்கள் அவர் வசித்து வந்த குருமனை நோக்கி ஓடினுர்கள். ஓடியவர்கள் அங்கே கண்டது என்ன? தாங்கள் கேட்ட செய்தி உண்மைதான் என்று கண்டார்கள். அதுவும் தம் சொந்த மக்களுக்காக இது வரையிலும் வியர்வையை மட்டும் சொரிந்து உழைத்தவர், இப்போது தன் குருதியெல்லாம் கொட்டித் தன்னையே முற்ருகத் தாரை வார்த்த நிலையில் பலியாகிக் கிடந்தார்.

அடிகளார் அவர்கள் இவ்வுலகில் தனது வழிகாட்டியாகவும், தலைவராகவும் யாரைப் பின்பற்றினுரோ அதே தலைவரான இயேசுக் கிறிஸ்துவின் வழியிலேயே தன் குருதி முழுவதையும் சொந்த மண்ணில் சொரிந்து மரித்திருந்தார். மரணத்தைக்கண்ட மக்கள் மனங்கள் குமுறின. மட்டுநகர் ‘ஜீசஸ்’ மாண்டுவிட்டார். சமாதானப்புரு பறந்துவிட்டது. வெள்ளை ரோஜா வாடி விட்டது என்றெல்லாம் வாய்விட்டு அலறினுர்கள்.

## குருமகன் மலர்ந்த குடும்பச்சோலையும் மலர்வும்

மீன்பாடும் தேனுடாம் மட்டுமா நகரை வசிப்பிடமாகக்கொண்ட திருவாளர் கிறிஸ்ரி பிலிப் பெர்ஞண்டோ, திருமதி இன்ஞசியா பெர்ஞண்டோ தம்பதிகளுக்கு நான்கு ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், நான்கு பெண்களுமாக மொத்தம் எட்டுக் குழந்தைகள் இம் மண்ணில் மலர்ந் தார்கள். மலர்ந்த மலர்களில் இரண்டாவது மலரே இறைவனை நெருங்கிப் பணிபுரிய ஏற்ற மலரான சந்திரா பெர்னுண்டோ என்ற வெண் ரேஜா மலர். 1941ம் ஆண்டு ஆவணித் திங்கள் ஒன்பதாம் நாள் இம் மலர் மலர்ந் தது. குழந்தையின் முகம் பிறப்பிலேயே சந்திரக் கலை கட்டியது. எனவே திருமுழுக் கால் மாஷல் கிறிஸ்ரி என்ற பெயர் சூட்டி ணுலும் சந்திரனை ஒத்தவனுக்கு சந்திரன் என் றும், குடும்பப் பெயரான பெர்னுண்டோவை யும் சேர்த்து சந்திரா பெர்னுண்டோ என் னும், செல்லப் பெயரும் சூட்டப்பட்டது. இறுதிவரையும் நிலைத்து நின்றதும் இந்தப் பெயரே ஆகும்.

குழந்தைப் பருவத்தின் போது ஏனைய குழந்தைகளுக்கு இவர் சளைத்தவர் அல்லர். எதில்? குறும்புத்தனத்தில்! அதே நேரத்தில் துடியாட்டத்திலும் இவர் வெகு சுட்டி. மூத் தது ஆண், இரண்டாவது பெண்ணுக இருந் திருந்தால் எத்தனை குறும்புகள் செய்தாலும் பெற்றேருக்கு அது பேரானந்தமாக இருந் திருக்கும். ஆனுல் இவரும் ஆணுயிற்றே. அதனுல் குறும்புக்கும், துடியாட்டத்திற்கும் இவர் தண்டனை பெறவும் தவறவில்லை.

பிறப்பது ஆணுகிலும், பெண்ணுகிலும், அது ஆண்டவரின் அன்புக் கொடை என்றே பெற்றேர்கள் கொண்டாடினுர்கள். பிள்ளை கள் மேல் அதிக கவனம் செலுத்தினுர்கள்; அத்தோடு கண்டித்தும் வளர்த்தார்கள். இத ஞல் பிள்ளைகள் அனைவரும் நல்லொழுக்கத் திலும், படிப்பிலும் சிறந்து விளங்கினர். அடிகள் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு மரியாள் பாடசாலையில் (சென் மேரீஸ் பாடசாலை) படித்து முடித்தார்கள்.

## பீடப் பணியாளனுகவும், அதன் வழி குரு மட மாணவனுகவும்.

பாடசாலை நாட்களில் இவரை அருட் திரு. ஹென்றி பொன்னையாவின் பாசம் ஈர்த்திழுத்தது. அவருடன் சேர்ந்து அவ ரால் வழி நடத்தப்பட்டார். இதனுல் பொன்னையா சாமியின் ''பொன்குட்டி'' என்று ஆரம்பத்திலும், ஆனுல் அவர் வழி

---

அமைச்சர் : நாட்டிலுள்ள பெரும் பஞ் சத்தை நமது ஆராய்ச்சி மணியே காட்டுகிறது அரசே!

அரசர் : ஏன், அடிக்கடி மணி அடிக்கிறதா ?

அமைச்சர் : இல்லை, நேற்று ஒரு பசு ஆராய்ச்சி மணியின் கயிற்றையே சாப்பிட்டு விட்டது.

---

யாகவே குருகுலம் சேர்ந்து குருத்துவம் எய்து, ஆயரில்லத்தில் நிதிப்பொறுப்பாளராக பணி புரியுங்கால், அதே பொன்னையா சாமியா ரால் ''எஜமான்'' என்றும் அழைக்கப்பட் டார். காரணம், தான் ஆளாக்கிய தன் மைந்தன் தன்னையே பராமரிக்கும் நிலைக்கு உயர்ந்து விட்டானே என்ற பெருமிதம்! ''நான் பத்துப்பேரை குருமடம் அனுப்பி இம் மறைமாவட்டத்தின் குருவாக்கியுள்ளேன் அவர்களில் எனது மிகவும் அன்பார்ந்த மகன் சந்திரா தான்'' என்று தனது குருத்துவப் பொன் விழாவின்போது பேட்டி கண்ட என் னிடம் கூறினுர்கள். இது அன்று நம் ஆண் டவன் இயேசுவுக்கு வானகத் தந்தை கூறிய வார்த்தைகளாக எதிரொலித்தது. இதனுல் தான் என்னவோ பொன்னையா சாமி மரித்த ஆறு மாதத்தில் தன் புதல்வனையும் அழைத் துக் கொண்டார்.

இலங்கையில் தன் ஆரம்பக் கல்வியை முடித்த தந்தையவர்கள், 1963ம் ஆண்டு ஆனி மாதத்தில் இந்தியா சென்றுர். அங்கு பெங்க ளூரில் உள்ள புனித வளனுர் குருத்துவக் கல்லூரியில் தத்துவ சாஸ்திரக் கல்வியைக் கற்றுக்கொண்டார். அதே ஆனி மாதம்தான் அடிகள் ஆண்டவரிடம் செல்லவும் ஏதுவா யிருந்தது இங்கு குறிப்பிடத் தக்கது.

1968ம் ஆண்டு சென்னையிலுள்ள திரு இருதய குருத்துவக் கல்லூரியில் குருக்களுக்கே உரித்தான இறையியல் கல்வி கற்கப் புகுந் தார். இந் நாட்களில் சென்னையில் போதக ராகப் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த எனக் கும், அடிகளாருக்கும் நெருக்கம் அதிக மாயிற்று. வாரத்தில் ஒரு முறையேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் சந்தித்து எமது மறை மாவட்டத்தில் ஓர் சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டுமென ஆசைப்பட்டோம். அதைத் தமது பணிக்காலத்தில் தாம் இருந்த இடமெல்லாம் செயற்படுத்தியும் வந்தார்.

## குருத்துவம் ஏற்ற குணக்குன்று :-

21. 9. 72ல் அடிகளாரின் வாழ்வில் ஓர் பொன்னான நாள். அன்று தான் தன்னைப் பெற்றவர்களின் ஆசை நிறைவேற, தன்னை குருமடம் அனுப்பினவர்களின் மனம் குளிர, தன்னை உருவாக்கினவர்களின் உள்ளம் பூரிக்க, தான் கொண்ட இலட்சியம் நிறைவேற எமது மறை மாவட்டக் குருக்களுள் ஒருவராக தனியாக அல்ல, இன்னும் மூவருடன் சேர்த்து அன்றைய ஆயர் வந்தனைக்குரிய இக்கினேசியஸ் கிளெனி (யே. ச.) அவர்கள் திருக்கரத்தால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

## பணித் தளங்கள் :-

ஒரு குரு குறுகிய ஒரு வட்டத்திற்குள் அடங்கியவர் அல்லர். அவரது பணி பரந்து விரிந்த பணி. மறை மாவட்டத்தில் எங்கேயாவது எப்பணியாவது ஆற்றுவது அவர்கள் கடமை. ஆகவே மறை மாவட்டத்தின் பேராலயப் பங்கின் துணைத் தந்தையாகவும், பணி புரிந்தார். அடுத்து 01.09.76ல் திருமலை சின்னக்கடைப் பங்கின் தந்தையாக நியமனம் பெற்றார். இதனைத் தொடர்ந்து 01.01.78ல் மறை மாவட்டத்தின் நிதிப் பொறுப்பாளராகவும், அதேவேளை பெரிய கல்லாற்றுப் பங்கின் வெற்றிடத்தை நிரப்ப அப் பங்கின் பொறுப்புக்களையும் ஏற்றுச் செயற்பட்டார். 1984ம் ஆண்டு தொடக்கம் 6. 6. 88 வரை மட்டக்களப்பு மரியாள் இணைப்பேராலயப் பங்குத் தந்தையாக நியமனம் பெற்றார்; பணி புரிந்தார்.

---

**கணவன் :** ஊரெல்லாம் ஒரே காய்ச்சலா இருக்கு. குடிக்க வெந்நீர் கொடு.

**மனைவி :** ஏன் இப்படி பயந்து சாகறிங்க? அதுமூளைக்காய்ச்சல் உங்களுக்கு வரவே வராது.

## சூறாவளி தந்த சுறுசுறுப்பு :-

1978ம் ஆண்டு மட்டுநகரில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய சூறாவளியை நாம் மறந்து விட முடியாது. கத்தோலிக்க ஆலயம் அனைத்தும் ஏறக்குறைய அழிவுற்ற நிலையில் காணப்பட்டன. சிதைந்த ஆலயங்களைச் செப்பனிடும் பணி அடிகளையே சார்ந்திருந்தது. ஒவ்வொரு ஆலயமாக ஓடோடிச் சென்றார். செய்ய வேண்டியவற்றை உரியவர்களைக்கொண்டு செய்து முடித்தார். இன்று அழகுறக் காட்சி தரும் ஆலயங்கள் பலவும் குருமனைகள் பலவும் அடிகளாரின் அயரா உழைப்பே ஆகும்.

## நிதிப் பொறுப்பாளரின் சீரிய பணிகளில் ஒன்று :-

எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பதைப் போன்று எந்த வேலைக்கும் நிதியே பிரதானம். இந்த நிதியைத் தேடும் பணியில் அடிகளார் அதிக நாட்டம் காட்டினார். மறை மாவட்டத்திற்குட்பட்ட காணிகளையும் கட்டிடங்களையும், சொத்துக்களையும் பற்றிப் படித்தார், ஆராய்ந்தார், தேடிச்சென்றார். பல எதிர்ப்புக்களைச் சம்பாதித்தார். அனைத்தையும் சமாளித்துக் கொண்டார். தாமே ஒரு விவசாயியாக மாறி வயலுக்குச் சென்றார், கூலியாட்களுடன் தங்கினார், உணவுண்டார், சேற்றிலும், சகதியிலும் இறங்கினார். இதன் விளைவு மறை மாவட்டம் உணவிலே தன்னிறைவு கண்டது. கட்டிடங்களையும், காணிகளையும் தேடி, முறைப்படி அவற்றை உரிமையாக்கிக் கொண்டார். இன்று மறை மாவட்டத்தின் பல சிக்கல்களை தீர்த்து வைத்து விட்டு ஓய்வு பெறுகின்றார். இந்தச் சுறுசுறுப்பும், உற்சாகமுமே ஈற்றில் தமிழ் மக்களின் துயர் துடைக்க தந்தையவர்களை உந்தித் தள்ளியது.

## பொதுச்சேவையில் புண்ணியவான்

நெஞ்சு பொறுக்குதில்லையே, நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மாந்தரை நினைத்து விட்டால் என்ற பாரதியாரின் குமுறல் கேட்டது போல் தந்தைக்கு ஓர் உணர்வு. இலங்கையில் அண்மைக்கால கலவரங்களால் கட்டவிழ்க்கப்பட்டு விட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல்கள் அடிகளைப்பெரிதும் பாதித்தது. தன் இன மக்களின் அபயக்குரல் தந்தையவர்களின் அடிமனத்தை உறுத்தியது. ''அன்புப் பணி புரி'' என்ற ஆண்டவனின் குரல் ஒலியும் அவருக்குக்கேட்டது. துணிந்து விட்டார். அன்றொரு நாள் இயேசுவின் முகம் துடைத்த வெரொணிக்காளின் வீரம் பெற்றார். அன்புப் பணி செய்தார். ஆறுதல் மொழி கூறினார் அழுகிறவர்களோடு அழுதார். சிரிப்பவர்களோடு சிரித்தார். அலுவலகங்களில், பள்ளியில், தொழிற்சாலைகளில், வீதிகளில், விடுதிகளில், குப்பை மேடுகளில் எங்கும் பணி, எதிலும் பணி, எப்பொழுதும் பணி புரிந்தார். இதற்காகப் பிரஜைகள் குழுவிலேயும் இணைந்தார். இதனால் எங்கும் ''பாதர் சந்திரா, பாதர் சந்திரா, பாதர் சந்திரா'' என்ற பேச்சே அடிபட்டது. இதன் நிறைவே அவரது இறுதி யாத்திரையில் மக்கள் அஞ்சலியாய் அமைந்திருந்தது.

## புண்ணியவான் போய்விட்டார் பாவிகள் பரிதவிக்கின்றோம்.

பச்சை மரம் அடியோடு சாய்ந்து விட்டது. பட்டமரம்தானா இனி பூக்கப் போகின்றது? நிலவு கடன் வாங்கலாம், சூரியன் ஒளியை யாரிடம் கடன் வாங்குவது? பெயர்தான் சந்திரா ஆனால் அடிகள் சந்திரனாக அல்ல சூரியனாகவே துணிந்து செயல்பட்டார். சூரியனுக்கே இங்கு மரண ஊர்வலம் நடத்தி விட்டோம், அதே சூரியன் இன்று எம்மைப் பார்த்துக் கேட்கின்றார் ஏன் அழுகிறீர்கள்? எனக்காகவா? பச்சை மரமே அடியோடு சாய்ந்து விட்டேன்; பட்ட மரமான உங்களுக்கு பாதுகாப்பு ஏது? எனக்காக அழ வேண்டாம், உங்களுக்காகவே அழுங்கள். உங்கள் பிள்ளைகள் பிலாத்துவாக மாறியமைக்காக அழுங்கள். பிணம் தின்னும் கழுகுகளாக மாறியமைக்காக அழுங்கள். அவர்களின் துருப்பிடித்த இதயங்களுக்காக அழுங்கள். இதயங்கள் சுத்திகரிக்கப்படாமைக்காக அழுங்கள் என்று ஆண்டவர் கிறிஸ்து கூறிய வார்த்தைகளை வைத்தே நம்மை நொந்து கொள்ளச் சொல்கின்றார். எண்ணி எண்ணி அழுவோம். ஆறுதல் தர யாருமே இல்லை. ஓடி வர அடிகளும் இங்கு இல்லை. ☐

# நன்றி..நன்றி..நன்றி!

மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயப் பங்குத் தந்தையும், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டப் பிரஜைகள் குழுவின் தலைவருமான அருள்திரு. சந்திரா பெர்னாண்டோ அவர்கள் அகால மரணமடைந்த செய்திகேட்டு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் நண்பர்களும் அன்பர்களும் தம் இறுதி அஞ்சலியைச் செலுத்த ஓடோடி வந்திருந்தனர் யாழ் மறை மாவட்டத்திலிருந்து வந்திருந்த குரு முதல்வர் அருள்திரு. மைக்கல்சாமி அவர்களுக்கும், புனித பிரான்சிஸ் சவேரியார் குருமட மாணவர்களுக்கும், கொழும்பிலிருந்து வந்திருந்த, திருக்குடும்ப - அப்போஸ்தலிக்க கார்மல் சபைக் கன்னியர்களுக்கும், மன்னார் மறைமாவட்டத்திலிருந்து வந்திருந்த அருள்திரு. ஜேசுராஜா அவர்களுக்கும், இன்னும் அஞ்சலி செலுத்த வந்திருந்த அனைவருக்கும் திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயரும், இறை மக்களும் தம் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

# தெரிந்துகொள்ளுங்கள்...!

☐ இளம் வயதிலேயே சைக்கிள் ஓட்டத்தொடங்கியவர்களில் பெரும்பாலோர் உயரமாக இருக்கின்றனர். காரணம் சைக்கிள் பயிற்சி தைராய்டு சுரப்பியை அதிகமாக இயங்கச் செய்து தைராக்சின் அணுக்களைப் பெருக்குகிறது.

☐ தங்கத்தைவிட கனமான உலோகம் பிளாட்டினம்.

☐ உலக மகா காவியங்களில் அதிக நீளமானது மகா பாரதமாகும்.

☐ தமிழ் மொழியில் நூல்கள் எழுதி அதிகமாக வருமானம் அடைந்தவர் மறைந்த தமிழறிஞர் டாக்டர் மு, வரதராசனார், இரண்டாமவர் தமிழ்வாணன்,

☐ 'பூமராங்' - இது ஆஸ்திரேலியப் பழங்குடியினரின் ஆயுதம். இது எதிரியைத் தாக்கி விட்டு ஏவியரிடமே திரும்பி வருமாம்,

☐ அதிக நாட்கள் உயிர் வாழும் மிகச் சில பிராணிகளில் ஆமையும் ஒன்று. சில ஆமைகள் நானூறு ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிகள்

துன்புற்றோர் துயரம் துடைக்கத் துணிந்தாய்
தொல்லைகள் சாடிச் சீறி எழுந்தாய்
இன்னலுற்றோர் ஏழைகள் ஏக்கம் களைந்தாய்
இல்லையென்றோர்க்குப் பாரியாய்ப் பொழிந்தாய்
வன்செயல் வழியில்லை விடுதலைக்கென்றும்
வாழ்வுண்டு ஒளியாய் தமிழனுக்கென்றும்,

**வின்சன் டீ பவுல் சபை**
**கல்லாறு.**

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய்
வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து
எங்கள் அனைவரையும் ஆருத்துயரில்
ஆழ்த்திச் சென்று விட்டாய்
எம்மீது உயிராய் உணர்வாய்
உற்றபெரும் துணையாய் இருந்த
அன்பு நெஞ்சே நீர்
ஊரவர் விழியில் குளமாய் அமரரானும் !

**கிறிஸ்தவ வாழ்வுச் சமூகம்**
**கல்லாறு.**

## கண்ணீர் துடைப்பார் யாரோ?

அன்னையின் பாச மலராய் எங்களுக்கு
ஆலையின் நிழலான அருட்சுடரே :
தென்னையிள நீராகப் பொதுப் பணியில்எம்
தாகங்கள் தணித்த சந்திராவே !

வெட்டுண்ட விருட்சநிழலே! எங்கள்
வேதனையெல்லாம் சுமந்த மலையே !
கட்டிய அமைதிப்பணிக்காய் அரிய
ஆவியை ஈந்த தியாகச் சிலையே !

தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்காகத்
தளராதுழைத்தாய்! தாய்க்குலத்தின் கண்ணீர்
துடைத்தாய்: தனயர்க்கு வாழ்வளித்தாய்-இன்று
எம்கண்ணீர் துடைக்க யாருண்டு ஐயா ?

**மட்டுநகர் முத்தழகு.**

**அருள்திரு. சந்திரா அடிகளின் மறைவையொட்டி வெளியிடப்பட்ட பிரசுரமொன்றில் காணப்பட்ட கருத்துள்ள சில கவிதை வரிகள் ...!**

*எல்லாமே*
*அதிக விலையேற்றமென்று*
*யார் சொன்னார்கள் ?*
*மரணம் இங்கே*
*மலிவாகிப் போனது.*

*வெள்ளைப் புறுவொன்று*
*கொள்ளையடிக்கப்பட்டதாம்*
*இந்தப் புறுவின்*
*விலாசம்*
*மக்கள் மனங்களில்*
*விதைக்கப்பட்டுக் கிடக்கிறது.*

*பிரிந்த உயிர்*
*பிதாவினுடைய தாக யிருக்கலாம்*
*ஆனால்,*
*உயிர்த்தெழுவது*
*மக்கள் சக்திதான்*
*பிதாவின்*
*பிரிந்த உயிர்*
*ஊதிய சங்கில்*
*சாம்பல் சாம்ராஜ்யங்கள்*
*சரிந்து வீழலாம்.*

★ *வயதானவர்கள் எல்லாவற்றையும் நம்புகிறார்கள். நடுத்தர வயதினர் எல்லாவற்றையும் சந்தேகப்படுகிறார்கள். இளைஞர்களோ எலலா வற்றையும் அறிந்திருக்கிறார்கள்.*
**- வயல் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி அஞ்சலி...



மக்கள் பணியில் தன்னுயிர் நீத்த அருள்திரு, சந்திரா பெர்ணாண்டோ அடிகளாருக்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் மக்கள் திரள் திரளாக வந்து அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டமே சோகத்தில் மூழ்கி இருந்தது. அனைவரது முகங்களிலும் சோர்வு குடிகொண்டிருந்தது இனி எமக்கு யார் என்ற ஏக்கம். நகரெங்கும் வெள்ளைக் கொடிகள் பறந்தன. அவை அமைதிப் புறுவொன்று அநியாயமாகச் சாகடிக்கப்பட்ட அவலத்தை எண்ணியெண்ணி அரற்றுவதுபோல் அடிக்கடி அசைந்து கொண்டிருந்தன. ஒலி பெருக்கிகள் ஆலயங்கள் தோறும் சோக கீதமிசைத்தன. இதயக் கதவுகளை இறுக மூடிய கொலைகாரர்களைப் போல் இறுதி நாளில் மட்டக்களப்பு நகரக் கடைகளும் கதவுகளை மூடித் துயரத்தைக் காட்டின. மட்டக்களப்பு வரலாறு காணாத துயரத்தில் தோய்ந்திருந்தது.

இரண்டு நாட்களாக மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் தந்தையின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பாடசாலைகள், தனிப்பட்ட நிறுவனங்கள், மன்றங்கள், அமைப்புக்கள்,முன்னணிகள், இளைஞர் இயக்கங்கள்,பொது மக்கள் எனப் பல திறத்தாரும் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து அஞ்சலி செலுத்திய காட்சி, அடிகளார் மீது மக்கள் கொண்டிருந்த அன்பையும், மதிப்பையும் மட்டுமல்ல அவரது பணியையும், அதன் பயனையும் எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்திருந்தன.

இறுதிச்சடங்குகள் 8ம் திகதி மாலை 3.00 மணியளவில் ஆரம்பமாகின. இதற்குமுன் நகரின் பல்வேறு இடங்களிலும் உள்ள கத்தோலிக்க ஆலயங்களிலிருந்து மக்கள் அணிவகுத்து வந்தனர். வெண்ணுடை உடுத்து, பதாதைகள் தாங்கிப் பக்திக் கீதமிசைத்தவாறு பவனி வந்தனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தைச் சேர்ந்த குருக்களும், யாழ்நகரிலிருந்தும், கண்டியிலிருந்தும் அஞ்சலி செலுத்த வந்திருந்த குருக்களும், மறைமாவட்டத்தின் முன்னை நாள் ஆயர் பேரருள்திரு. L. R. அன்ரனி அவர்களும், தற்போதைய திரு/மட். மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினர். ஏறக்குறைய இருபதாயிரம் மக்கள் கலந்துகொண்ட இறுதிச் சடங்கில் உரையாற்றிய அருள்திரு. நோபட் ஒக்கஸ் அவர்கள் :

'' ஒரு குருவினுடைய பணி எத்தகையது என்பதற்கு காலஞ்சென்ற அருள்திரு. சந்திரா பெர்ணாண்டோ அவர்கள் ஓர் அடையாளமாக இருந்தார். இறைபணியும், மக்கள் பணியும் இணைந்ததே குருத்துவப் பணியென்றும், அதை அப்படியே வாழுகின்ற வாய்ப்பும், மனப்பாங்கும் அடிகளாருக்கு அமைந்திருந்தது '' என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில் '' அடிகளாரின் இறப்பு அழுகைக்கு உரிய ஒன்றல்ல. நாம் மகிழ்ந்து பெருமைப்படக்கூடியது. அவர் இறப்பின் மூலம் புதிய வாழ்வு பெற்றுள்ளார். மக்களுக்காக உயிர் நீத்த தியாகி ஒருவரை எமது மறைமாவட்டம் கொண்டிருப்பதில் நாம் பெருமைப்படுகிறோம். இதுவரை காலமும் மன்னார் மறைமாவட்டத்தில்தான் வேதசாட்சிகள் இருந்ததாக வரலாறு; இப்போது கிழக்கு மாகாணமும் கிறீஸ்துவின் பெயரால் மக்களுக்காகத்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுயிர் நீத்த ஒரு வேத சாட்சியைக் கொண்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

திருப்பலியைத் தொடர்ந்து இரங்கற்கூட்டம் அருள்திரு. நோயல் இம்மானுவேல் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இதில் பல்வேறு மதப் பிரமுகர்களும், அமைப்புக்களைச் சார்ந்தவர்களும் உரையாற்றினர்.

இந்து மதத்தின் சார்பில் உரைநிகழ்த்திய சுவாமி ஜீவானந்தஜீ அவர்கள் உரையாற்றுகையில்:

''அடிகளார் மிகவும் அன்பு கொண்டவர். அந்த அன்பின் காரணமாகவே அவர் மக்களுக்காக பணிகள் பல ஆற்றினார், எந்த நேரத்திலும், எத்தகைய பிரச்சினைகளிலும், அடிகளார் துணிச்சலோடு செயற்பட்டார்'' என்று கூறினார்.

முஸ்லிம் மக்கள் சார்பில் உரையாற்றிய மௌலவி அல்ஹாஜ் M. H. M. புகாரி காலாயி அவர்கள் தமது பேச்சின்போது :

''சமாதானம் தழைக்க சதாவும்உழைத்த சமாதானப் பிரியர் அவர். சமூகத்தலைவர், தமிழ் முஸ்லிம் உறவுக்காகத் தணியாது பணிசெய்த துணிகரத்தந்தை.

இக்கட்டான கட்டத்தில், நெருக்கடியான நேரத்தில் அருட்திரு. தந்தையை, பெறுமதி மிக்க பெரியவரை நாம் பிரிந்துவிட்டது நமது துர்ப்பாக்கியமே. அமைதிக்காய் உழைத்து உதிரம் சிந்தி அமைதி அடைந்த விட்டார்கள். இவர் விட்டுச்சென்ற வெற்றிடம் வெற்றிடந்தான், இலகுவில் நிரப்பக் கூடியதல்ல'' என்று குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய அங்கிலிக்கன் சபைக்குரு அருள்திரு. ஜோசுவாரெட்ணம் அவர்கள்

'' மக்களின் நண்பன், ஏழைகளின் அன்பன் இங்கே உறங்குகிறார். அவருக்காக இங்கே நாம் அழுகிறோம்.

நாம் அழவேண்டியது யாருக்காக?நமக்காகத்தான்!

நாம் அழவேண்டியதுஇறைவன் அருளுக்காக. இறைவனுடைய நீதி புதிதானது; புனிதமானது. அதுதான் நம்மை, நம் நாட்டை வாழ்விக்கும்'' என்று கூறினார்.

பிரஜைகள் குழு உறுப்பினர் திரு. கதிர் பாரதிதாசன் அவர்கள் பேசுகையில்:

''மட்டக்களப்பு,அம்பாறை மாவட்ட பிரஜைகள் குழுக்கள் இயங்க மூலகாரணமாக இருந்தவர் அமரராகி விட்ட



**மனித வேட்டையால் மண்ணில் சாய்ந்த அடிகளாரின் பொன்னுடல்.**

நாம் அழவேண்டியது யாருக்காக? நாம் அழவேண்டியது மறைந்த தந்தை சந்திரா பெர்ணண்டோவுக்காக அல்ல. நாம் அழவேண்டியது யாருக்காக? நமக்காகத்தான். நமது சமூகத்துக்காக; நமது நாட்டிற்காக.

நாம் அழிவை விதைத்தோம் அழிவை அறுக்கிறோம். பகையை விதைத்தோம்; பகையை அறுக்கிறோம்.

சந்திரா பெர்ணண்டோ அடிகள்.

அவர் இனத்தின் ஒற்றுமைக்காகவும், சமாதானத்திற்காகவும் பெரிதும் பாடுபட்டவர்.

பொது மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக எத்தகைய அசம்பாவிதங்கள் நடந்தாலும் துணிந்து முன் சென்றவர்.

★ **வாழ்க்கை என்பது இனிய கதையோட்டமுள்ள நாவலன்று; படிப்பதையே திருப்பித் திருப்பிப் படிக்க வேண்டிய கணக்குப் புத்தகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பிரியும் தறுவாயில் கூட மக்களுக்காகவே அவர் சேவையாற்றினர் '' என்று குறிப்பிட்டார்.

மெதடிஸ்த சபையைச் சேர்ந்த அருள்திரு. விவேக நாதன் அவர்கள்தமதுரையில்

'' சுதந்திரத்தைப் பொது நலனுக்குப் பயன் படுத்தும் போது மனிதன் மாணிக்க மாகிறன். இவ்வாறுமாணிக்க மானவர் சந்திரா அடிகள்.

மூன்று நாட்களுக்கு முன் அவர் இறந்தார் என்று கூறு கிறேம். இல்லை, அவர் எப் போது மக்கள் நலனுக்குத் தன்னை அர்ப்பணித்தாரோ அப்போதே மறைந்து விட் டார். நானல்ல, என்னில் வாழ்பவர் கிறீஸ்துவே என்று வாழ்ந்தார். ஆகவே நாம் இன்னும் ஒருமுறை யேசுவைக் கொலை செய்துள்ளோம்.

பொது மக்களுக்காக, விடு தலைக்காக மனச் சாட்சியின் படி செயல்பட முடியாத நிலையில் நாம் இன்று இருக் கிறேம் என்பதற்கு அடிகளா ரின் மறைவு ஒரு சாட்சி '' என்று குறிப்பிட்டார்.

கத்தோலிக்க மக்கள் சார் பில் உரையாற்றிய திரு. கமலநாதன் அவர்கள்:

'' பிறருக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை என் கிறர்களே!... இதோ பிற ருக்குத் தொண்டு செய்த ஒரு மனிதர் மீளாத்துயிலில் மூழ் கிக் கிடக்கிறர்.

இக்கட்டான இக்கால கட் டத்தில் நமக்காக, நமது இளை ஞர்களுக்காக அவராற்றிய பணி இலகுவில் மூடி மறைக் கக் கூடியதல்ல.

---

★ நீங்கள் மகத்தானது என்று கருதும் ஒரு காரியத்துக்காக உங்கள் வாழ்க்கையைப் பயன்படுத்த வேண்டும். நீங்கள் தேய்ந்த பொருளாகக் குப்பையோடு குப்பையாக எறி யப் படுவதற்கு முன்பு அந்த மகத்தான காரியத்துக்காக உங்களைப் பயன்படுத்துங்கள். இதுதான் நீங்கள் செய்யவேண்டுவது, அல் லாமல் உலகம் உங்களுக்கு எதுவும் செய்ய வில்லை என்று சலித்துக்கொண்டு வேதனை களுக்கும், துயரங்களுக்கும் உறைவிடமாகக் கூனிக்குறுகி வாழக்கூடாது.

பெர்னாட்ஷா.

---

இன்னும் சிறிது நேரத்தால் இந்த இடம் வெறுமையாகப் போகிறது. இந்த வெறுமை சாதாரண வெறுமையல்ல. எவராலும் இலகுவில் நிரப் பப்பட முடியாத வெறுமை. எவரும் முன்வந்து நிரப்பத் தயங்கும் ஒரு வெறுமை.

மட்டக்களப்புக்கத்தோலிக்க சபையைப் பொறுத்த அள வில் இது ஒரு பாரிய இழப்பு.

சென்ற சனிக்கிழமை அவர் தம் நண்பர் ஒருவரிடம் கூறி ஞராம், '' செய்ய வேண்டிய வற்றைச் செய்து விட்டேன். இனிச்சிறிது ஓய்வு பெறவேண் டும் '' என்று. அவர் கருதிய சிறிய ஓய்வு நிரந்தர ஓய்வாகி விட்டது.

அடிகளாரின் இந்த இழப் பிலிருந்தாவது ஒரு திருப்பம் ஏற்பட வேண்டும். இத்த கைய இழப்புக்கள் சிறிதாயி னும், பெரிதாயினும் மேற் கொண்டு தொடரக்கூடா தென்பதை மக்கள் தெரிவித் துள்ளனர். அர்த்தமற்ற மனி தக் கொலைகள், அசிங்கமான மாமிச வியாபாரம் எக்காலம் நம்மை விட்டு நீங்குகிறதோ அக் காலமே மகிழ்ச்சியான காலமாகும்.

'' தர்மத்தின் வாழ்வுதனைச்
சூது கௌவும்
தர்மம் மறுபடி தழைக்
கும் ''

இரங்கற் கூட்டத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேரா லயத்தின் கிழக்கு மூலையில் அடிகளாரின் பொன்னுடல் அடக்கஞ்செய்யப்பட்டது.

கிழக்கிலங்கையின் அகல் விளக்கொன்று ஊதி அணைக் கப்பட்டுவிட்டது.

வழி தெரியாத இருளில் வாடவிட்டு தொடர முடியா வழியில் தூரச் சென்று விட்டது.

இனித் தெரிவதெல்லாம் வெறுமை! விரக்தி!

நெஞ்சில் மிஞ்சியதெல்லாம் வேதனை! ஏக்கம்!.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகிதம்

ஏ... காகிதமே...!
மானிட ஜீவனின் கற்பனைக் கோலங்களைக்
கவிதையாய்க் கடிதமாய்க் கதையாய்
இன்னும் பலவாய்
வடிக்க
உன் உடம்பையே தியாகஞ் செய்யும்
நீ ஒரு தியாகி !
வெட்ட வெட்டப் பொறுமை கொள்ளும்
பூமித்தாய் போல
கீறக் கீற பொறுமை கொள்ளும்
நீ எதையும் தாங்கும் இதயம் !
உலகின் மூலை முடுக்கெல்லாம்
உருவில் பலவிதமாய்
உலவித் திரியும்
நீ உலகம் சுற்றும் வாலிபன் !
மொத்தத்தில் அரிய பெரிய
சாதனைகள் புரியும் நீயோ
விஜய புரி வீரன் தான் !

**மல்லிகா இரங்கசாமி**
**உன்னிச்சை.**

# புது எழுச்சி பிறக்கட்டும்!

**- எம். எல். எம். அன்ஸார்.**

போரினிமே லிவ்வையம் விட்டுப்
போகட்டும்; சமர்சாம்ப லாகட்டும் !
ஆரிடமுஞ் சமாதானக் காற்றே
அடிக்கட்டும்; துவேசங்கள் வெடிக்கட்டும் !

ஒற்றுமையின் வாரிசுகள் மண்ணில்
ஓங்கட்டும்; பகைமைகள் நீங்கட்டும் !
மற்றோரின் இனமொழியை மாந்தர்
மதிக்கட்டும்: பொறுமையை மிதிக்கட்டும் !

காடையரின் கூட்டத்தை உலகம்
கழிக்கட்டும்; நல்லோர்கள் செழிக்கட்டும்:
நாடிடையே நடக்கின்ற சண்டை
நலியட்டும்; அமைதிமழை பொழியட்டும் !

குடிபோதை கொள்வோரின் கொட்டம்
குறையட்டும்; கொடுமைகள் மறையட்டும் !
அடியோடு கொலைகளவு செய்வோர்
அழியட்டும்; தீங்கெல்லாம் கழியட்டும் !

வன்முறையை வளர்ப்போரின் செய்கை
வாடட்டும்; வஞ்சகங்கள் ஓடட்டும் !
என்னுடைய தெனுஞ்சுய நலங்கள்
எரியட்டும்; இரக்கப்பூ விரியட்டும் !

களையெனவே பெருகுகின்ற அநீதி
கரையட்டும்; நீதிவெள்ளம் நிறையட்டும் !
இளைஞரிடை இருக்கும்புன் செயல்கள்
இறக்கட்டும்; புதுவெழுச்சி பிறக்கட்டும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தனச் சிதறல்கள்

## கோகிலா மகேந்திரன்

## 2

அவர் சொல்லிக் கொண்டே போனார்.

விரிவுரை தொடங்கி ஏறத்தாழ ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. மாணவர்களிடத்தில் மெல்லிய அலுப்புத் தெரியத் தொடங்கியது. அந்த அலுப்பை நீக்கும் கேள்வி ஒரு மூலையில் இருந்து எழுந்தது.

"ஒரு பெண்ணில் தோன்றும் துணை இலிங்க இயல்புகள் எவை சேர்?" கேள்வியும் ஆங்கிலத்திலேயே இருந்ததால் நாகரிகக் குறைவாகத் தோன்றவில்லை.

இக் கேள்விக்கான விடை ஒரு மருத்துவ மாணவனுக்குத் தெரியாமல் இருக்க முடியாது என்பது குகநாதனுக்குத் தெரியும்.

அவர் தனது கட்டையான உடம்பின் மெலிந்த தோள்களை ஒரு முறை மேலே தூக்கிவிட்டுக் கொண்டார்.

எல்லாவற்றையும் சொல்லிவிடப் போகிறாரோ? மேரியின் உள்ளம் சரேலெனக் கூசிக் கொள்கிறது. ஆனால் அவர் மிகத் திறமையான, விவேகமான பதிலாகச் சொல்லுகிறார்.

"உதாரணமாக இடுப்பென்புகள் விரிவடைதல் - சுருக்கமாகச் சொன்னால் ஒரு பெண்ணுக்கு அழகு தருகின்ற எல்லா இயல்புகளும் என்று சொல்லலாம்...".

மெல்லிய சிரிப்பலை மாணவர் மத்தியில் பரவ இன்னொரு மூலையில் இருந்து அடுத்த கேள்வி எழுந்தது.

"ஒரு இலட்சியப் பெண்ணின் அழகு என்பதற்கான வரைவிலக்கணம் என்ன சேர்?"

குகநாதன் தன்னைத் தளர்த்திக்கொண்டார். "சரி நீங்கள் எல்லாரும் கொஞ்ச நேரம் விஷயத்திலையிருந்தும் பாடத்திலையிருந்தும் விலக விரும்பிறியள் போலை இருக்கு சொல்லிறன்... ஒரு இலட்சிய அழகிக்கு, ஆங்கிலப் பெண்ணின்ரை நிறமும், ஐரிஸ் சிரிப்பும், பிரான்சியப் பெண்ணின் வளைவுகளும், ஸ்பானிஸ் நடையும், இத்தாலிய மயிரும், எகிப்தியக் கண்ணும், கிரேக்கத்து மூக்கும், அமெரிக்கப் பல்லும், வியன்னாக் குரலும், யப்பானியச்சிரிப்பும், ஆர்ஜன்ரைன் தோளும், தாய்லான் கழுத்தும், சுவிஸ் கையும், ஸ்கண்டினேவியன் காலும், சைனீஸ் பாதமும், அவுஸ்திரேலியாச் செழிப்பும் இருக்க வேணும்.

அதோட அந்தப்பெண் ஒரு பிரான்சியத் தாய் போலச் சமைக்கவும், ஜேர்மன் தாய் போல வீடு பராமரிக்கவும், அமெரிக்க மாதுபோலை உடை உடுக்கவும் தெரிஞ்சிருக்க வேணும்...இப்படி ஒரு பொம்பிளை எங்கையும் இருந்தால் எனக்கும் சொல்லுங்கோ..."

என்று கூறி முறுவலித்தார் குகநாதன். இந்த விளக்கத்தை மாணவர் எல்லாரும் மிக ரசித்ததான நிலை வகுப்பில் மீண்டும் ஒரு பொலிவையும் புத்துணர்வையும் கொணர்ந்து விட்டது.

"அந்தப் பெண்ணின்ரை காதல் செய்யும் முறை எந்த நாட்டு முறையா இருக்க வேணும்?" இன்னொரு மாணவன் திடீரென்று கேட்டான்.

"ஓஃப் கோஸ்... லவ் இஸ் பியோன்ட் நஷனலிசம்..." என்று சிரித்தார் அவர். (இதுவரை குகநாதன் சொன்னவைகளைக் கஷ்டப்பட்டுத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லிக்கொண்டு வந்தேன். இதை அப்படியே சொல்லிவிட்டேன். பரவாயில்லைத்தானே?)

"இப்போது நாங்கள் மீண்டும் பாடத்திற்கு வருவோம். பெண்களில் கொழுப்புருண்டைகளின் பரவலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறர் அன்பு

(1) ''வாழ்க்கையில் மற்றவர்களுடைய துன்பத்தைத் துடைப்பதற்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும், நம் அன்பினுல் அவர்கள் துன்பச் சுமையைக் குறைக்க முயல வேண்டும், இதைக்கூட நம்மால் செய்ய முடியவில்லை என்ருல் நாம் எதற்காக இந்த உலகத்தில் வாழ வேண்டும்,''

-ஜோர்ஜ் எலியட்

(2) ''நமது பகைவர்களை நேசிக்கும் அளவிற்கு நாம் மகான்களாக இல்லாமலிருக்கலாம்; ஆனுல், குறைந்த பட்சம் நம் உடல் நலம், மகிழ்ச்சி இவற்றுக்காகவேனும் அவர்களை மன்னித்து மறந்து விடுவோம்,''

'டேலகார் கெனலி'

தொகுப்பு: செ. எட்வேட் நியூட்டன்

பெண்மை நிலையை எய்துவதற்கான உளவியல் மனேநிலை மாற்றங்களையும் இந்த ஓர்மோன் ஏற்படுத்துகிறது''

விரிவுரை தொடர்ந்து கொண்டிருக்கையில் நளினி, மேரியைத் தட்டிக் காதினுள் கேட்டாள்.

''மெய்யேடி... சேர் இன்னும் 'மறி' பண்ணேல்லையோ?''

''எனக்கும் வடிவாத் தெரியாது. முந்தி 'மறி' பண்ணி 'வைஃப்' செத்திட்டா எண்டு யாரோ கதைச்சவை...''

இவர்கள் தமக்குள் ஏதோ கதைத்துக் கொள்வதைக் குகநாதன் கவனித்து விட்டார்.

'மேரிக்கு என்ன பிரச்சினை?'

''ஒண்டுமில்லை சேர்...'' என்று தயங்கினுள் அவள்.

''கேளுங்கள், அப்போது தான் உங்களுக்குக் கொடுக்கப்படும்'' என்று குகநாதன் சொல்ல, ஆண்கள் பக்கமிருந்து ஒரு குரல், ''அது தானே, கேளடா கிருப்ஸ்... என்ன பிரச்சினையெண்டாலும் கேளன். அப்பதானே தரலாம்...'' என்று நக்கலாகக் கூறியது.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலையால் மிகவும் சங்கடப்பட்டுப் போனுள் மேரி, மனதின் உள்வெளியில் இன்னதென்று தெரியாது சொரு சொருவென்று பல நினைவுகள் தோன்றின.

★ ★ ★ ★

மழைபெய்து புழுதிஅடங்கி உலகை இனிமை போர்த்தாற்போல் இருக்கிறது.

யாழ் பல்கலைக் கழகத்தின் நடுவே அழகாய் உயர்ந்து நிற்கும் கைலாசபதி அரங்கு!

'மணி பிளான்ற்ஸ்' பசுமைகளின் பின்னணியில், அரங்கின் தெற்குப் புறமாக நீண்டு செல்லும் நடை பாதை வழியே நடந்து செல்லும் மாணவர் கூட்டம் ஒன்று 'கன்ரீனை' அடைகிறது.

திருத்தி ஒழுங்கு செய்த புருவமும், அடி வயிற்றில் இறங்கிவிட்ட சேலையும், 'குறொப்' வெட்டப்பட்ட தலைகளும், ஜீன்சில் உட்புகுந்த லிப்ஸ்ரிக் வாய்களுமாகப் பல நாகரிகப் பெண் உருவங்களும் அக் கூட்டத்தில் தென்படுகின்றன.

'ஆண்களின் உடை ஆண்களுக்கும், பெண்களின் உடை பெண்களுக்கும்' என்பதை எப்போதும் நினைவில் கொள்ளும் மேரி, அழகான 'பிங்க்' சாறியில் கன்ரீனின் முன்புறத்தில் அவள் தோழிகளுடன் அமர்ந்திருப்பதைக் கண்ட 'கிருப்ஸ்' அவர்களுக்கு முன்னே போய் இருந்து கொள்கிருன்.

''எப்படி நேற்றைக்கு 'வைவா'? என்னைப் போட்டு சிவா உருட்டு உருட்டென்று உருட்டிப் போட்டார்...'' எனருன் ஒருவன்.

## தொடர்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ எங்கை ஒண்டும் படிக்காமல் திரிஞ்சனி... பள்ளிக்கூடப் பெடியன் மாதிரி ' இந்தியன் ஆமி' பாக்கப்போனனி முந்த நாளும்...என்ன கேள்வி கேட்டிருந்தாலும் உனக்கு உருட்டிற மாதிரித்தான் இருந்திருக்கும்'' என்ருன் ரெருபேட்.

''இந்தமுறை' வைவா' விலை எங்கடை 'பொடி'யிலை ஒராளுக்குத் தானும் ' ஹையஸ்ற் மாக்ஸ்' எண்டு கேள்வி...'' என்று மேரியைக் கடைக்கண்ணுல் பார்த்தபடி கூறினுன் கிருப்ஸ்.

மேரியின் மனம் கட்டுக்களை எல்லாம் அவிழ்த்துக் கொண்டு ஓடிவிடப் பரபரத்துத் துடிக்கிறது.

''நீ'சல்' அடிச்சுக்கொண்டு திரியத்திரிய அந்தநாள் படிச்சதெல்லே?'' என்ருன் இதைப் புரிந்துகொண்ட இன்னொருவன்.

'' அந்த 'ஹையஸ்ற்' உனக்கு வந்ததுக்குச் சரிதானே... பிறகேன் கவலைப் படுருய்?'' என்று ஏற்றிவிட்டான் மற்றவன்.

கதை வேறு பக்கம் திசை திரும்புவதை உணர்ந்த மேரி, மீண்டும் அதைச் சாதாரண உரையாடலாய் மாற்றும் முயற்சியாய், ''ஏதோ லக்கிலி, நான் படிச்சுக் கொண்டு போன கேள்வியள் தான் எனக்கு வந்தது...'' என்ருள்.

'' இவள் முதல்நாள் லைபிறறியிலை குகநாதனிட்டை ' டவுற்ஸ்' கேக்க வெண்டு போனவள்... அவர் கேள்வியள் ஏதும் சொல்லிக் குடுத் தாரோ தெரியாது. எங்களுக்கு ஒண்டும் சொல்லேல்லை'' என்ருள் நளினி.

''இல்லையடி... 'புறொமிஸ், அவர் எனக்கு ஒரு கேள்வியும் சொல்லித் தரேல்லை...'' என்ருள் மேரி அவசரமாக.

தான் முதல் நாள் குகநாதனிடம் ' டவுற்ஸ்' கேட்கப் போன நினைவுகள் அவளுக்குள் எழுந்தன.

நரம்புகளில் கணத் தாக்கம் கொண்டு செல்லப்படும் பொறிமுறை தனக்கு விளங்கவில்லை என்று கேட்கவே அவள் குகநாதனிடம் போனுள்.

அதைப்படம் கீறி விளக்குவதற்காக அவர் அவளது கொப்பியை எடுத்துக் கொண்டு பேனுவை அவளிடமிருந்து வாங்குகையில் அவரது கை அவள் கையில் பட்டது.

நெஞ்சில் சூர்வாளாக அச்சம் முளைத்தது மேரியின் மனதில்.

பூவின் வண்ணம் கண்டு முகரப்போனுல் அது முடைநாற்றம் வீசப்போகிறதோ?

சீ...... அப்படியிருக்க முடியாது. '' நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப் படாத படிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.''

அது தற்செயல் நிகழ்வாகவே இருக்கவேண்டும்... ஆனுலும் அவர் அதற்காகச் 'சொறி' கூடச் சொல்லவில்லை என்பது அவளுக்குள் ஏமாற்றமாகவே இருந்தது.

இவர்கள் நினைப்பது போல் அவர் கேள்விகள் எதுவும் சொல்லிக் கொடுக்கவில்லை. இறுதியாக அவள் ' நன்றி' சொல்லிவிட்டு எழுந்து வரும் போது ஒன்று சொன்னுர்.

''மேரி, எனக்குச் சரியா உம்மைப் போல் ஒரு தங்கச்சி இருக்கிரு... மூக்கும், பெரிய கண்ணும், அடர்த்தியான இமையும்... சரியா உம்மைப் போலத்தான்... அதிலை எனக்கு உம்மைப் பாக்கிற நேரமெல்லாம் என்ரை தங்கச்சியின் எண்ணம் வருது. அந்த எண்ணத்தாலை நான் உமக்குப் பாட விஷயங்களிலை ஏதும் ஃபேவர் செய்திடக் கூடாது எண்டு எப்பவும் கவனமாய் இருக்கிறன்.''

அந்த வசனங்கள் அவளை அதிகமாக ஈர்த்திருந்தன. இந்த நினைவுகளிலிருந்து அவள் விடுபட முன்னர்,

''மேரியிலை எப்பவும் ஒரு இயல்பு - தன்ரை படிப்பு விஷயம் எப்படியும் வலு கவனம்... வெறி ஸ்ரெடி றெகுலர் வேர்க்...'' என்ருன் கிருப்ஸ்.

எப்படியோ அவன் இவ்வாறு கூறுகையில் வாணம் ஒளிமயமாய்ப் பூக்களைச் சிதறினுற் போல் அவளுக்குள் ஓர் இன்ப அதிர்வு குலுங்குவதை அவள் உணரவே செய்தாள். ஆனுல் ஏன் அவளால் அவனை விரும்ப முடியவில்லை?

**(தொடரும்)**

---

★ உன்னுல் முடிந்த அளவு இன்று நன்ருகச் செயலாற்று. மறுநாள் அதைக் காட்டிலும் நன்ருகச் செய்யும் ஆற்றலைப் பெற்று விடுவாய்.

- கதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயோ! மூளைக்காய்ச்சல்...!

எமது நாட்டின் பல பகுதிகளில் மூளைக் காய்ச்சல் நோய் பரவி உள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட பல குழந்தைகளும், சிறுவர்களும்,வளர்ந்தவர்களும் இறந்திருக்கின்றனர். இதற்கு இன்னும் சரியான மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை என்றே கூறப்படுகிறது.

பெருமளவில் குழந்தைகளையே தாக்கும் இந்நோயை வராமல் தடுக்கச் சில எளிய தடுப்பு முறைகளை இந்திய மருத்துவக் கழகத்தினர் வெளியிட்டிருக்கின்றனர்.

வேப்ப மரத்துக்கிளைகளிலிருந்து நாலைந்து கொழுந்து இலைகளைச் சேகரியுங்கள். சற்றுத் தண்ணீர் விட்டு அரைத்துச் சாறு எடுத்துக் கொள்ளுங்கள். மூன்று தேக்கரண்டி வேப்பஞ்சாற்றுடன், மூன்று தேக்கரண்டி தேனையும் கலந்து ஒவ்வொரு நாளும் ஒரு முறை குழந்தைக்குக் குடிக்கக் கொடுங்கள். இப்படித் தொடர்பாக ஒரு மாதம் கொடுக்கவேண்டும்.

மூளைக் காய்ச்சல் நோய் பரவச்செய்யும் நுளம்புகளை வீட்டிலிருந்து ஒழிக்க - அண்டவிடாமல் தடுக்கச் செய்யும் தடுப்பு வழி உள்ளது.

வேப்ப மரத்தின் காய்ந்த இலைகளைப் பொடியாக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

1. வேப்ப இலைப்பொடி ஒரு பங்கு
2. கடுகு பத்தில் ஒரு பங்கு
3. சாம்பிராணி பத்தில் ஒரு பங்கு
4. நெல்உமி அரைப் பங்கு
5. மஞ்சள் துண்டு அரைப் பங்கு

மேற் குறிப்பிட்ட பொருட்களை ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளுங்கள். இவைகளை எரிதணலில் இட்டு வீட்டுக்குள் நன்றாகப் புகை காட்டுங்கள்.

வேப்பெண்ணெய் அல்லது எலுமிச்சம் புல் தைலம் அல்லது வேறு ஏதாவது நுளம்புத் தடுப்புக் களிம்புகளை குழந்தைகள் மேல் பூச வேண்டும்.

இத் தடுப்பு முறைகளைக் கையாள்வதன் மூலமாக உங்கள் குழந்தைகளை மூளைக் காய்ச்சலின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

**நன்றி - நம் வாழ்வு.**

# கவிஞர் வைரமுத்து பைபிள் படிக்கிறார்.

தமிழகத்திரைப்படத் துறையில் பிரபல கவிஞராக விளங்கும் இரா. வைரமுத்து எம். ஏ. அவர்கள், தாம் அடிக்கடி பைபிள் படிப்பதாகக் கூறினார்.

தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் கிறித்தவ சஞ்சிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியின்போது;

'' நான் அடிக்கடி படிப்பது பைபிள். பைபிளிலுள்ள உன்னதப்பாட்டும், (உன்னத சங்கீதம்) சங்கீதங்களும் எனக்கு மிக நன்றாகப் பிடிக்கும். இவை இரண்டையும் கவிதைகளாகவே அடையாளம் கண்டு கொண்டுள்ளேன். உயர்ந்த இலக்கியம் என்று சொல்லலாம். அத்தனை நயம், சொல்லாட்சி, கருத்து.

கிறீஸ்தவப் பாடல்களை எழுதுவீர்களா என்று கேட்டபோது; '' எழுத மாட்டேன். இயேசுவை நான் நேசிக்கிறேன். ஏனென்றால் அவர் மனிதர்களை நேசித்தார். அவர் மனிதர்கள் கொண்டிருந்த பாவக் கறையைச் சலவை செய்தார். எந்த மதத்தின் மீதும் எனக்குப்பற்றும் இல்லை. வெறுப்பும் இல்லை.''

இவ்வாறு கூறினார் **கவிஞர் வைரமுத்து.**

## ★ இந்திராகாந்தியின் பதில்

கேள்வி: **நீங்கள் பதவியிழந்த காலம், உங்கள் மகன் சஞ்சய்காந்தி இறந்த துக்கமான காலம் இப்படிப்பட்ட துயரமான சமயங்களில் நீங்கள் எப்படி சமாளித்துக்கொண்டீர்கள் ?**

பதில்: **நான் ஏன் அதைச் சமாளிக்க வேண்டும்? அது என் வாழ்க்கையின் ஒரு பகுதி என்றுதான் நான் அந்த நேரங்களைக் கடத்தினேன், கஷ்டங்கள் இல்லாத வாழ்க்கை யாருக்குமே வருவதில்லை; நமது கஷ்டங்களை நாம் அனுபவித்துத்தான் தீர்க்கவேண்டும், அவைகளில் இருந்து நாம் எப்படித் தப்பித்துக் கொள்ள முடியும் ? கஷ்டங்களை அனுபவித்து வாழ்வதுதான் வாழ்க்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988 ஆனி 6ம் நாள் மட்டக்களப்பு மண்ணின் வரலாற்றில் ஓர் கறைபடிந்த இருண்ட நாள்! இம்மண்ணிற்கேயுரிய, இம் மண்ணிற்காய் உழைத்த

- சமாதானப் புறு ஒன்று சுட்டு வீழ்த்தப் பட்ட நாள்
- மென்மன வெள்ளை ரோஜா கசக்கிப் புழுதி யில் வீசப்பட்ட நாள் அது
- கீழைக் கரையின் கலங்கரை விளக்கு ஊதி அணைக்கப்பட்ட நாள்
- தேடி வந்த மாந்தருக்கெல்லாம் ஆறு தல் நிழல் தந்த கற்பக விருட்சம் வெட் டிச் சாய்க்கப்பட்ட தினம்
- அழுது வந்த மாந்தரின் கண்ணீரைப் பரிவுடன் துடைத்த கரம் உடைத்து முறிக்கப்பட்ட நாள்!
- பர்வதமாய் வீற்றிருந்து நலிந்தோருக்கு பல மூட்டிய மலையொன்று தகர்க்கப் பட்ட தினமானது ஆனி 6ம் நாள்!

கடந்த சில மாதங்களாய்த் தொண்ட னில் தலத் திருச்சபையும், சமகாலப்பிரச்சனை களும் பற்றிய எனது ஆய்வுரைக் கண்ணோட் டத்தில் மக்கள் பிரச்சினைகளில் தலத் திருச்சபை ஈடுபாடு கொள்ளத் தவறினால் அது அர்த்தமற்ற திருச்சபையாக மாறி விடும் என்றும், நம் நாடுபோல் பிரச்சினைகளை எதிர்நோக்கும் நாடுகளில் சிரமத்துடன் கடமை நிறைவேற்றும் அதன் உயிர்த்தியா கங்கள் கூடி வருகின்றன என்றும் நான் குறிப் பிட்டதுபோல, எல்சல்வதோர் ஆயர்போல, போலந்தின் குருவைபோல, எம்நாட்டு வஸ் தியான், மைக்கல் றொட்ரிகு அடிகள் வரிசை யில் தியாகஞ் செய்து நிற்கும் அடிகள், மக்கள் நலனில் அக்கறைமிக்க தலத் திருச் சபையாக திரு/மட். மாவட்டத்தை அர்த்த முள்ள முறையில் மாற்றிய முன்னோடி என் கின்ற பெருமைக்குரியவர் என்றால் அது மிகையல்ல. அவர் மதம் என்கிற வட்டத்தை விட்டு நீங்கி -

# சுமை தாங்கி சாய்ந்தால்...!

**ஆனந்தா A. G. இராஜேந்திரம்**
புளியடிக்குடா.

ஒரு யூதாசையும், எட்டையப்பனையும் நம் கண்முன் நிறுத்திய அந்த நாளே நீ வராதிருந்தால் எவ்வளவு நலமாக இருந் திருக்கும்!

மக்கள் விரோத சக்திகளின் முகமில்லா எடுபிடிகளினால் தொடரப்பட்டுவரும் அர்த்த மற்ற படுகொலைகளின் உச்சம்தான் அருட் தந்தை சந்திராவின் படுகொலை!!

- ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும்,
- எளியோருக்கு நல்லசேதி கூறவும்,
- சிறைப்பட்டோர் விடுதலை அடையவும்,
- குருடர் பார்வை பெறவும் அனுப்பப் பட்ட தேவமகன் கிறீஸ்துவின் பாதை யிலே வழி நடந்த பெருமகன் அவர்;
- மக்கள் துயரகற்றும் பணியிலே துஞ்சாது உழைத்த தியாகி!
- அண்டிவந்த மக்களின் குறைதீர்க்கும் அரு மருந்தாகப் பணியாற்றிய உயர்ந்த உள் ளம்!
- சமாதானம் நிலைக்கவும், அமைதி தளைக் கவும், நிம்மதி பிறக்கவும், ஓடியோடிச் செயலாற்றிய உத்தமன்!
- ஏழைகளின் தோழன், பாட்டாளிகளின் காவலன், இளைஞர் சமுதாயத்தின் வழிகாட்டி!
- சாதி, சமய பேதங்கள் கடந்து நின்று மனித இனத்திற்காக உயிரைத் துச்ச மென மதித்த பண்பாளன்; உயர் விழு மியங்களின் உறைவிடம்!

☐ **நல்ல காரியங்களை நாமாகவே தேடிச் செய்ய வேண்டுமே தவிர நல்ல காரியங் கள் தாமாக வந்து சேருவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மக்களின் விடிவிற்காக கிறீஸ்து உழைத்தாரோ அதே மக்களின் அறியாமையால், சுயநலமிகளின் மிலேச்சத்தனமான ஏவுதலால் சிலுவையில் கொடூரமான முறையில் அறைந்து கொல்லப்பட்டார். அன்று தன் உதிரத்தைக்கூட யூத மண்ணில் சிந்தி அவர்களுக்காக உயிரை அர்ப்பணித்தார் கிறிஸ்து.

இதோ அதே தலைவனைத் தன் தலைவனுகத் தெரிந்து நின்று மக்களுக்காக, மக்களில் ஒருவனுக, அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து உழைத்த அடிகள், எந்த மண்ணில் சமாதானம் நிலவவேண்டும் என்று அல்லும் பகலும் சிந்தித்து அயராது உழைத்தாரோ அதே மண்ணில் சரிக்கப்பட்டுவிட்டார். மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்தவரை மக்கள் விரோத சக்திகள்தான் அழிக்க முற்படமுடியும். இந்த வகையில் மட்டுநகர் நலனில் அக்கறையில்லாத அற்ப ஜீவிகளால், அல்லல்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் நலனை கிஞ்சித்தும்எடுத்துக்கொண்டிராத சுய நலமிகளால் மட்டுமே இவரை வீழ்த்தியிருக்க முடியும்! ஏனெனில்,

- சந்திரா அடிகள் மதத் தலைவர் மட்டுமல்ல, அவர் ஒரு மக்கள் தலைவரும் கூட;
- கிழக்கின் தலைநகரில் அவர் வேகமாக வளர்ந்து வந்த ஒரு சக்தி;
- மக்கள் மத்தியில் விழிப்புணர்வை விதைத்து வந்த ஒரு சக்தி அவர்.
- பணமும், துப்பாக்கிக்குண்டும் அதிகாரஞ் செலுத்தி மக்களை அடிமை கொள்ளும் இன்றைய உலகிலே, அன்பை ஆயுதமாகக் கொண்டு மனித உள்ளங்களைக் கொள்ளைகொண்டு வந்த கவர்ச்சிமிக்க ( Attractive Leader ) தலைவர்
- மக்கள் மனதின் உணர்வுகளை அஞ்சாது உரத்துக் கூறிய பலம்மிக்க சக்தியாக அவர் மாறிவந்தார்,
- ஒற்றுமையில் மட்டுமே சமாதானம், நிலைக்குமேயல்லாது, வேலியே பயிரை மேய்கின்ற சூழலில், மக்களைப் (பாது) காக்கின்றவர்களையே நம்பினுல் சமாதானத்திற்கு மக்கள் காக்கவேண்டிய நிலை தான் ஏற்படும் என்று உணர்ந்து அதற்கேற்ப செயற்பட்டுவந்த மக்கள் சக்தி அவர்.

---

★ உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு துப்பாக்கியும். ஒவ்வொரு போர் விமானமும், ஒவ்வொரு ஏவுகணையும், உடுத்த ஆடையின்றி பசியிலும், பிணியிலும் வாடும் ஏழை மக்களிடமிருந்து திருடப்பட்ட பணத்திலிருந்தே உற்பத்தி செய்யப்படுகின்றன.

**D. ஐசேனுவர்.**

*(முன்னுள் அமெரிக்க ஜனுதிபதி)*

---

- குரல்வளை திருகப்பட்டு, மூச்சுத்திணறிக் கொண்டிருக்கும் தேன்னுட்டுத் தமிழ் மக்களுக்குத் தம் குரலைத் தாரைவார்த்த தலைவர் அவர்,
- தமது பதவி அந்தஸ்து, வசதிகளைப் பயன்படுத்தி மக்களை,குறிப்பாக இளைஞர் சமுதாயத்தைப் பாதுகாக்க முன்னின்று உழைத்த சக்தி அவர்
- கிழக்கிலங்கை அரசியல்வானில் புறக்கணிக்கமுடியாக் குரல் கொண்டு உதயமாகிக் கொண்டிருந்த சந்திரன் அன்னுராகும்.

இப்படிப்பட்டவரை வேறு எப்படிப்பட்டவர்கள்தான் அப்படிக் குரூரமாய் கொலை செய்ய முடியும் ?

மரணம் வாசற்கதவைத் தட்டி நிற்பதைக் கேட்டிருந்தும் தன் பணியில் பின் வாங்காத அவரை, கொல்லக் காத்திருந்த ஜெருசலேம் நகரினுள் தன் பணியின் இறுதிக் கட்டத்தை நிறைவேற்ற அஞ்சாது நுழைந்த கிறீஸ்துவுடன் ஒப்பிடுவது மிகப்பொருத்தமே?

சாவில்கூட அவர் கிறீஸ்துவின் வழியில் தான். ஆம் தன் உதிரம் உடலின்றோடி இம் மண்ணை நனைக்கச் செய்து சமாதானத்திற்கான முதற்பலியாகத் தன்னை ஏற்படுத்திக் கொண்டு விட்டார் அடிகளார்.

கிறீஸ்துவின் மரணம் மானிட இனத்திற்கே விமோசனம் தேடித்தந்ததுபோல, சந்திரா அடிகளின் மரணமும் தமிழ் பேசும்

(20ம் பக்கம் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் திரு. சந்திரா அடிகள் மரணம்! நடந்தது என்ன?

**அறிக்கை**

கடந்த ஜூன் திங்கள் 6ம் நாள் படுகொலை செய்யப்பட்ட அருள்திரு. சந்திரா பெர்ணண்டோ அடிகளாரின் மரணம் தொடர்பான தகவல்கள் இதோ!

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் பேரன்புக்கும், பெருமதிப்பிற்கும் உரிய சந்திரா பெர்ணண்டோ அடிகள் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட பிரஜைகள் குழுக்களின் தலைவருமாவார்.

பொதுப் பணியில் ஆர்வம் கொண்டு தீவிரமாகச் செயல்பட்ட அடிகளாருக்குக் கருத்து முரண்பாடு கொண்டவர்களிடமிருந்து, பல தடவைகளில், அச்சுறுத்தல்கள் வந்ததாம். தொலைபேசியின் மூலம் மிரட்டப்பட்ட சம்பவங்களும் உண்டு.

அண்மைக் காலமாகத் 'தமக்கு ஏதும் நேரிடலாம்' என்ற அச்சம் அடிகளாருக்கு இருந்து வந்தது. இதனைத் தமது நண்பர்களிடம் தெரிவித்துமிருக்கிறார்.

சம்பவம் நடந்த தினமான ஜூன் திங்கள் 6ம் நாள் பி. ப. 3.45 அளவில், மரியாளின் ஆண்டை ஒட்டித் தமது பங்கில், வீடுகளில் நடைபெற்று வரும் செபக்கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காகச் சென்றார். அப்போது குருமனையில் உதவிப் பங்குத் தந்தை வெளியேறியபின், ஏறக்குறைய பி. ப. 4.30 மணி அளவில், சந்திரா அடிகள் தமது இருப்பிடமான குருமனைக்குத் திரும்பி வந்துள்ளார். அப்பொழுது குருமனையில் யாருமே இருக்கவில்லை. இத் தனிமையைப் பயன்படுத்தியே கொலைகாரர்கள் குருமனைக்குள் நுழைந்துள்ளனர். அவ்வேளை ஆலய வளவினுள் சிலர் வேலை செய்துகொண்டு நின்றுள்ளனர்; ஆலயத்துள் காவலாளியும் இருந்துள்ளார். ஆயினும் கொலைகாரர்கள் சென்றதை யாருமே கவனிக்கவில்லையெனத் தெரிகிறது. அடிகளாரைச் சந்திக்க அடிக்கடி பலரும் வருவதால் யாரும் பொருட்படுத்தவில்லை.

திடீரென்று துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டபோது, எங்கிருந்து சத்தம் கேட்டது என்று எவருக்குமே புரியவில்லை. ஆனால் 4.30 மணிக்கும் 5.00 மணிக்கும் இடையில், ஏறக்குறைய பி. ப. 4.50 அளவில், கொலை நடந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சத்தத்தைத் தொடர்ந்து சேட்டும், லோங்சும் அணிந்திருந்த மூன்று இளைஞர்கள், குருமனையிலிருந்து வெளிவந்து, சைக்கிளில் ஏறிச் சென்றுள்ளனர். ஒருவரது தோளில் வெள்ளை நிறப்பையொன்று தொங்கியது. இதனைக் கோவிலில் நின்றவர்களும், வேறு சிலரும் பார்த்துள்ளனர். ஆயினும், அடையாளம் காண முடியவில்லையாம்.

கொலைகாரர்கள் சென்றதும் காவலாளியும், வேறு சிலரும் குருமனைக்குச் சென்று, மூடியிருந்த கதவைத் திறந்து, உட்சென்று பார்த்தனர். அப்போது சந்திரா அடிகள் தமது காரியாலய அறை வாயிலில் இரத்த வெள்ளத்தில் சரிந்து கிடப்பதைக் கண்டனர். இரண்டு கன்னங்களிலும் குண்டுகள் பாய்ந்து, பின் தலை வழியாக வெளியேறியிருந்தன; பின் தலை சிதைந்து, மூளை சிதறியிருந்தது. அவர் அணிந்திருந்த அங்கியின் பொத்தான்கள் கழன்றிருந்தன. அறையிலிருந்த கதிரைகள், காற்றாடி (Fan) முதலியவை வீழ்ந்து, அறை அலங்கோலமாகக் கிடந்தது. அறையினுள்

தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்கவும்...



★ சார், உங்க முகம்......

□ ஏங்க, நல்லா இருக்குதுங்களா... நான் அடிக்கடி என் முகத்த கண்ணாடியில் பார்க்கிறது வழக்கமுங்க.

★ அப்படியா? அப்போ இது வரையில உங்க கண்ணாடியை உடைச்சிருப்பீங்களே!

□ ? !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*

மக்களின்றி குப்பாக ஊரெங்கும்மரணவீடாக மாறிநிற்கின்ற அளவுக்கு மனித உயிர் குரூரமாகப் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கொலைக்களமாக உருவாகிவரும் மட்டுநகர் வாழ் மக்கள் சமுதாயத்திற்கு விமோசனம் தேடித்தரவேண்டும்; தேடித்தந்தே தீரும்!!

நீதிமானின் இரத்தமும், மறு கிறீஸ்துவாக அபிசேகம் செய்யப்பட்ட நல்ல குருவின் இரத்தமும் தன்பங்கிற்கு நீதியை நிலை நாட்டியே தீரும்; இது உறுதி!

ஆனாலும்,

இத்தகைய தியாகியின் மரணம் அவர் எந்த இலட்சியத்திற்காய் உயிர் துறந்தாரோ அந்த இலட்சியம் நிறைவேற தக்கபடி பயன்படுத்தப்படவில்லை என்பது ஓர் வேதனையான உண்மை. சகல மக்களுக்கும் தன்னைத் தந்தையாக்கிக் கொண்டதன் மூலம் ஒரு சமூகத் தொண்டனாக, தலைவனாகிக் கொண்டவர் அடிகளார் சந்திரா. அவர் ஒரு பங்கிற்கு சிறிய எல்லைக்கு மட்டும் உரியவரல்ல! இப்பகுதி தமிழ்பேசும் மக்களுக்கெல்லாம் தலைவர் அவர். அப்படியிருக்க அவரைக் கத்தோலிக்கக் குரு என்கிற வட்டத்திற்குள் அடைத்து, அவரது மகிமையைக் குறைத்த செயலாக அவரது இறுதி நாட்கள் அமைந்துவிட்டமை எம்மை வேதனைப்படுத்துகிறது. சகல மக்களுக்கும் உரியவராக வாழ்ந்து, மடிந்தார் என்பதை இன்றும் அவரது சமாதி முன்வந்து அழுதுநிற்கும் மக்கள் கூட்டம் காட்டி நிற்க, அவரை ஒரு பங்குக்குரு என்ற கருத்துப்பட ஆற்றப்பட்ட இறுதிச் செயற்பாடுகள் அவரது இலட்சியத்தையே குறைப்பதுபோல மனதுக்குள் ஒரு ஊடுருவல்! அது மட்டுமல்ல இப்படிப்பட்ட நல்ல குருவின் மரணத்தை, தம் வாழ்வால் கத்தோலிக்க விசுவாசத்திற்கு வலுவூட்டி, கிறிஸ்துவின் போதனைக்கு நடைமுறை சாட்சியம் சொன்ன உத்தமனின் படுகொலையைத் தலத் திருச்சபை ஏன் கண்டிக்கவில்லை? கிறீஸ்துவின் சீடர்போன்று ஒருபெந்தகொஸ்தே நாள்வரை பதுங்கி நிற்கின்றதா?

எப்படியோ,

ஒரு சுமைதாங்கி சாய்ந்துவிட்டது!... அதனால் ஒரு பெரிய வெற்றிடம்... அதை நிரப்புவது யார்?

...சுமைகள் இங்கே ஏக்கப் பெருமூச்சு விடுகின்றன!

---

**(19ம் பக்கத் தொடர்ச்சி)**

சேட் பொத்தான்கள் மூன்றும், வெள்ளி மோதிரம் ஒன்றும் காணப்பட்டன. இவை கொலைகாரருடையதாக இருக்கலாமென்றும் கொலை முயற்சியிலிருந்து தப்பிக்க அடிகளார் போராடியிருக்க வேண்டும், அப்போது அறுபட்டு, கழன்று வீழ்ந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. வெற்றுத் தோட்டாக்கள் மூன்றும் அறையினுள் காணப்பட்டன, உடன் செய்தி ஆயருக்குத் தெரிவிக்கப்பட்டது. மருத்துவ மனைக்குக் கொண்டுபோக முயற்சி எடுக்கப்பட்டபோதும், உயிர் பிரிந்துவிட்டதால், அம் முயற்சி கைவிடப்பட்டது.

இதற்கிடையில், செய்தி அனைத்திடங்களிலும் பரவி, அடிகளாரின் உறவினர்களும், பங்கு மக்களும் கூடி விட்டனர். பலரது வேண்டுகோளுக்கு மிணங்க அமைதிப் படையினரதும், பொலிசாரினதும் உதவியுடன் சந்திரா அடிகளாரது உடல் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சட்ட விசாரணைகளுக்குப் பின், மறை மாவட்டப் பொறுப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டது.

நெருக்கடியான கால கட்டத்தில், மக்களுக்கு அரும் பணியாற்றிய சந்திரா அடிகளாருக்கு ஏற்பட்ட மரணம், மட்டக்களப்பு வாழ் மக்களுக்குப் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

**- கலைமணி.**

★★★★★★★★★★★★★★★★★★

★ மற்றவர்களின் தீய குணங்களை நாம் கற்களால் செதுக்குகிறோம். ஆனால் அவர்களின் நற்குணங்களை ஓடும் தண்ணீரில் எழுதுகிறோம்.

**விக்டர் ஹியூகோ.**

★★★★★★★★★★★★★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொரன்ரோ மாநகரில் மாபெரும் பாராட்டு விழா!

- கனடாவிலிருந்து சுசீலா இராசரெட்ணம்

மட்டக்களப்பிலுள்ள தேற்றாத்தீவுக் கிராமத்தைச் சேர்ந்த திரு. கே. செல்வராஜ கோபால் அவர்கள் தற்போது குடும்பத்துடன் கனடாவில் வாழ்ந்து வருகிறார். தமிழ்மொழி இலக்கியம், கிறித்தவம், புதினம், காவியம் எனப் பலதுறை சார்ந்த நூல்களை எழுதிக் குவித்துள்ள இவரைப்பற்றி கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தொண்டனில் விரிவான கட்டுரை ஒன்று இடம்பெற்றதை வாசகர்கள் அறிவர்.

அச்சுத்துறை அனுபவமும் வாய்த்த இவர் தமது குடும்பத்தவரின் துணையோடு தமிழ் கணணியை (கொம்பியூட்டர், உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டுள்ளார். அதன் வழியாக கணணி மூலமாக தமிழ் நூல்கள் சிலவற்றை வெளியிட்டுள்ள இவர் 'நிழல்' எனும் பெயரில் மாத சஞ்சிகை ஒன்றையும் கம்பியூட்டரில் நெறிப்படுத்தி வெளியிட்டு வருகின்றார். இவரது இந்த அரிய பணியையும், தமிழ்த் தொண்டையும் பாராட்டி கனடாவில் வாழும் தமிழ் மக்கள் நடாத்திய பாராட்டு விழா பற்றிய செய்திக் கட்டுரை ஒன்றை கனடாவிலிருந்து சுசீலா இராசரெட்ணம் அவர்கள் தொண்டனுக்காக அனுப்பி வைத்துள்ளார்.- (ஆ - ர்.)

தமிழ்கூறு நன்னுடெங்கும் பெருமை கொள்வகை தமிழ்க் கணணியை இன்று எம்மவர்க்கு அறிமுகஞ் செய்த பெருந்தகை திரு. கே. டி. செல்வராஜ கோபாலையும், அவரது பல்நோக்கிற்கும் பக்கபலமாய் அமைந்து உதவிபல நல்கும் அன்பு மனைவி, அருமை மக்கள் யாவரையும் பாராட்டு முகமாகவும் அவர் தமிழுக்கு பல வடிவங்களிலாற்றும் தொண்டுகளும், அயரா முயற்சியின் ஆக்கங்களும் மென்மேலும் உலகெங்கும் தழைத்தோங்க வேண்டுமென்று வாழ்த்தி அவரை ஊக்குவிக்கும் நோக்கிலும் றொரன்ரோ மாநகரின் எவ்ஸ்மார் என்னுமிடத்தில் 17 - 04 - 1988 ஞாயிற்றுக்கிழமையன்று சேக்கம் பேரவையால் வழங்கப்பட்ட S.A.C.E.M. 1987 Honory Award ஐ, மதிப்புக்குரிய குடியேற்ற அதிகாரி திரு. வெல்காம் அவர்கள் திரு. கே. டி. செல்வராஜ கோபால் அவர்களுக்கு அளித்துக் கௌரவித்தார்கள். மேற்கு நாடுகளில் அதுவும் கனடாவிலும் தமிழ் வளர்க்கப்படுகிறது என்பதனைப் புலப்படுத்தும் வகையில் அம்மண்டபத்தை நிறைத்திருந்த மக்கள் கைதட்டலினூடே தம் பேராதரவைத் தெரிவித்தனர்.

இவ்வைபவத்தை ஆரம்பித்துவைத்த சங்கத் தலைவி திருமதி இராசமணி இராசநாயகம் பேசும்போது "திரு. கே. டி. செல்வராஜ கோபால் ஒரு தமிழார்வம் மிக்க தமிழ்த் தொண்டன். இவர் எம்முடனேயிருந்து எம் தாய்மொழி அழியாமல் பேணிக் காக்கப் பல் முயற்சிகளில் ஈடுபட்டார், ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார் என்றால் மிகையாகாது. அவரின் முயற்சிகள் பலவும் மென்மேலும் வளரவேண்டு"மென்று வாழ்த்தும் நல்லாசியும் வழங்கினார்.

அவரைத் தொடர்ந்து உப-தலைவர் சாம் சங்கர் உரையாற்றியபோது "குடத்துள் விளக்கும்போல, நிறைகுடம் தளம்பாது என்ற முதுவாக்குகளின் உண்மையினைப் புலப்படுத்துவதுபோல அமைந்த உருவம்தான் திரு. கே. டி. செல்வராஜ கோபால் என்றால் மிகையாகாது என்று வியந்துரைத்த அவர் தொடர்ந்து பேசுகையில் 60க்கு மேற்பட்ட புத்தகங்களின் ஆக்ககர்த்தாவாகவும், ஆசிரியருமாகப் பலகோணங்களினூடே எம் தாய்மொழிக்கு உயிரூட்டிக் கொண்டிருந்த புனைபெயரான் 'ஈழத்துப்பூராடனார்' இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழுக்கோர் முத்தாப்பாக விளங்கும் தமிழ்க் கணணிக்கும் முன்னோடி அவரே என்றால் விந்தையல்லவா?'' என்று தன்னுரை முடித்தார்.

அடக்கம், அமைதி, ஆணவமின்மை இவற்றின் புகலிடமான திரு. கே. டி. செல்வராஜகோபால் அவர்கள் பேசும்போது ''ஈழத்திலே எனது வாழ்க்கையைத் தமிழுக்குத் தொண்டு செய்வதிலே அர்ப்பணித்த நான் கனடா வந்ததும், தமிழுக்காக என்ன செய்வது என்ன செய்வது என்று அவாவிக்கொண்டேயிருந்தேன். அவ்வேளைதான் கணணியூடே அழகிய வடிவங்களைக் கொண்டமைந்த தமிழ் எழுத்துக்களை இணைத்து அதனூடே பல்லாக்கங்களைச் செய்ய முனைந்து வெற்றியுமீட்டினேம். இதன் முழுப்பங்களிப்பும் நானென்று கூறமுடியாது? நாளாந்த உறுதுணையான என் மனைவிக்கும், என் அன்பு மக்களுக்கும் அப்பெருமை சேரும் என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நான் செய்யும் ஆக்கங்கள் தமிழாகிய அன்னைக்குச் செய்யும் சேவையாகக் கருதுகின்றேன். தமிழார்வத்தால் உந்தப்பெற்ற நான் கனடாவிலிருந்து கொண்டு இயேசு புராணம், பெத்தலேகம் கலம்பகம் என்னும் நூல்களை நிறைவுசெய்துவிட்டு தமிழழகி, ஈழத்தின் வரலாற்றுப் பின்னணி என்னும் நூல்களை ஆக்கிக்கொண்டிருக்கின்றேன். எங்களாக்கத்திலொன்றான

---

☐ இராணுவச் செலவுகள் என்பது அடித்தளமே இல்லாத படுபயங்கர பாதாளமாகும்.

குருஷ்சேவ்
(முன்னாள் ரஷ்ய ஜனாதிபதி)

---

'நிழல்' என்னும் சஞ்சிகை அழியாவேரூன்றிக் கனடா நகரென்ன உலகெங்கும் கிளை பரப்பி விசாலித்துக்கொண்டிருக்கிறது. கனடா வாழ் தாய் தந்தையரே! எம் தாய் மொழி மேற்கத்தைய மொழிகளது ஊடுருவலினால் சிதைந்து அழிந்து போகாமல் உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கு அமிழ்தினுமினியதமிழ் மொழியைக் கசடறக்கற்பிப்பதே உங்கள் கடமை. இக்கடமையைச் செவ்வனே செய்வீர்களாயின் அதுவே தமிழுக்கு நீங்கள் செய்யும் மிகப்பெரிய சேவை என்று எம்மவரை இரங்கிக்கேட்ட அவர் இன்று எனக்கு அளிக்கப்பட்ட கௌரவிப்பு எனது தமிழார்வம் மென்மேலும் வளர ஊக்குவிப்பது போலமைந்தது'' என்று நலம்படக்கூறித் தம் முரைக்கு முற்றிட்டார் ஒட்டுமொத்தமாகக் கூறும்போது அன்று கனடாவில் இடம்பெற்ற கௌரவிப்பு விழா தமிழ் மக்கள் யாவருக்கும் உணர்ச்சியைத் தூண்டி ஊக்கத்தை ஊட்டுவதுபோலமைந்தது என்றே கருதலாம்.

---

# அன்னை அவள் அமரத்துவமடைந்தாள்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் முழங்கும் பொதுநிலையினர் என்ற பணிக்காக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தன் மகன் K. யேசுராசாவை அன்புடன் மறைமாவட்டத்திற்கீந்த அன்னை

# இஞ்ஞாசியா தேவசகாயம் அவர்கள்


**26 - 5 - 88ல் அமரத்துவம் அடைந்தாள்.**

தாளங்குடாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இறுதிக்காலத்தில் மட்./முதியோர் இல்லத்தில் வாழ்ந்து அமரராகினார்.
இவரது அடக்கச்சடங்கு ஆயர் தலைமையில் பல குருக்களும், கன்னியர், துறவிகள், பொதுநிலை அன்பர்கள் சூழ நிறைவெய்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பக்கம்



## - அப்போஸ்தலர் பணி -

### பரிசுத்த ஆவியின் வருகை

யூதர்கள் வழக்கமாக மூன்று திருவிழாக்களுக்கு எருசலேமுக்கு வருவர். பாஸ்கா விழா, பெந்தகோஸ்து விழா, கூடாரத் திருவிழா ஆகிய மூன்று திருவிழாக்களும் யாத்திரை விழாக்கள் என்று அழைக்கப்பட்டன. பாஸ்கா விழாவின்போது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட நிகழ்ச்சிகளையும், பெந்தகோஸ்து விழாவின்போது மோயிசன் மூலம் சீனாய் மலையில் இறைவன் மக்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையையும், கூடாரத் திருவிழாவின்போது பாலைவனத்தில் கூடாரங்களில் தங்கியிருந்ததையும் நினைவு கூர்ந்தனர்.

இவை மூன்றிலும் பெந்தகோஸ்து விழா மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக இருந்தது. பெந்தகோஸ்து விழா வாரங்களின் விழா என்றும், ஐம்பதாவது நாள் விழா என்றும் அறுவடையின் முதற்கனிகள் விழா என்றும் அழைக்கப்பட்டது. இந்த விழா ஓர் ஆழமான கருத்தையும் உட்கொண்டிருந்தது. அதாவது தங்கள் உடல் உறுதிக்கு இறைவன் நல்ல அறுவடையைக் கொடுத்ததைப் போன்று ஆன்ம வாழ்வின் உறுதிக்கு நல்ல சட்டங்களை கொடுத்திருக்கிறார் என்பதை உணர்ந்தனர். பெந்தகோஸ்து விழாவின் சிறப்புக்கு மற்றுமோர் காரணம் உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்த யூதர்கள் இவ்விழாவுக்கு எருசலேமுக்கு வருவர்.

### பெந்தகோஸ்து அனுபவம்

இத்தகைய ஒரு விழாவிலேதான் பரிசுத்த ஆவியின் வருகையும் அமைந்திருந்தது. பரிசுத்த ஆவியின் வருகை ஒரு புது அனுபவம். இந்த அனுபவத்தை விபரிக்க வார்த்தைகள் கிடைக்கவில்லை. எனவே 'போன்று' என்று கூறி ஒரளவுக்கு எம்மைப் புரிந்துகொள்ள வைக்கின்றார். உருவமற்ற இறைவனுக்கு யூத மக்கள் கொடுத்த உருவங்கள்தான் 'நெருப்பு' 'காற்று' என்பவை. கடவுள் தங்கள் மத்தியில் வந்துவிட்டதாகவும் அவரது வல்லமையால் தாங்கள் நிரம்பப்பெற்றிருந்ததையும் உணர்ந்தனர். மகிழ்ச்சி அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருந்தது. பரவசமடைந்திருந்தனர். அவர்களின் இந்த நிலையைக்கண்டு ஏனையவர்கள் ''இவர்களுக்கு மது மயக்கமோ'' என்று ஏளனம் செய்யக்கூடியதாக இருந்தது.

பெந்தகோஸ்து அனுபவம் அப்போஸ்தலர்களினதும் சீடர்களினதும் வாழ்விலே பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியது. ஒளிந்திருந்த அப்போஸ்தலர்களை நடுத்தெருவுக்குக் கொண்டுவந்தது. ஒடுங்கிப்போய் நின்றவர்களை உறுதிபெற்றெழச் செய்தது. பயந்து நடுங்கியவர்களை பயந்தெளிய வைத்தது. பேசும் திறனற்றிருந்தவர்களை பேச்சாற்றல் மிக்கவர்களாக ஆக்கியது. இயேசுவை விசுவசித்தவர்களுக்கும், அவரைக் கடவுளாக ஏற்றுக்கொண்ட கூட்டத்திற்கும் இராயப்பர் தலைவராக மாறுகின்றார். அவர் அங்கு கூடியிருந்த மக்களுக்கு ஆற்றிய உரையை லூக்கா விளக்கமாகத் தருகின்றார்.

### இராயப்பரின் உரை

இராயப்பர் தனது உரையில் இறைவாக்கு நிறைவேறி விட்டதாகக் கூறுகின்றார். யோவேல் இறைவாக்கினர் முன்மொழிந்தது நிறைவேறிவிட்டது. ஆண்டவருடைய நாள் புலர்ந்துவிட்டது. கடவுளின் ஆவி அனைவர் மேலும் பொழியப்பட்டுவிட்டது. கடவுள் தன் மக்களைச் சந்தித்துவிட்டார். நசரேத்தூர் இயேசுவில் மெசியா வந்துவிட்டார். ''வல்ல செயல்கள், அற்புதங்கள், அருங்குறிகளால் நசரேத்தூர் இயேசுவில் மெசியா வந்துவிட்டார். ''வல்ல செயல்கள், அற்புதங்கள், அருங்குறிகளால் நசரேத்தூர் இயேசு கடவுளது சான்று பெற்றவராக உங்கள் முன் எண்பிக்கப்பெற்றார்'' என்று முடிக்கின்றார். இராயப்பரின் உரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு மையக் கருத்துக்கள் அடங்கியுள்ளதைக் காணலாம்.

1. கடவுள் அவரை (இயேசுவை) அனுப்பினார்.
2. நீங்கள் (யூதர்கள்) அவரைக் கொன்றீர்கள்.
3. கடவுள் அவரை உயிர்த்தெழச் செய்தார்.
4? நாங்கள் எல்லோரும் அதற்கு (உயிர்ப்புக்கு) சாட்சிகள்.

இராயப்பரின் இந்த முதல் உரையில் மட்டுமல்ல. இதற்குப் பின்னர் ஆற்றிய உரைகளிலும் மேற்கூறிய நான்கும் அடிப்படை உண்மைகளாக அமைகின்றன. அவருடைய பேச்சைக் கேட்டவர்கள் அவர் கூறியவற்றை ஏற்றுக்கொண்டவர்களாக, உள்ளம் குத்துண்டவர்களாக, ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்'' எனக் கேட்கின்றனர். ''மனந்திரும்புங்கள். இயேசுவின் பெயரால் ஞானஸ்நானம் பெறுங்கள். அப்பொழுதுதான் நீங்களும் கடவுளின் வல்லமையால் நிரப்பப்படுவீர்கள்'' என்று இராயப்பர் பகர்கின்றார். இராயப்பரின் உரையைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்றவர்கள் 3000பேர் என லூக்கா கூறுவதிலிருந்து கடவுளின் வார்த்தை படிப்படியாக பரவுவதையும், கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பையும் எண்பிக்கிறார் என்பது தெளிவாகின்றது.

## ஆதிக் கிறிஸ்தவர்கள்

இவ்விதமாக இயேசுவின் பெயரால் ஞானஸ்நானம் பெற்றுப் புதிய நெறியிலே சேர்ந்தவர்கள் அனைவரும் யூதர்களாகவே இருந்தனர். யூதர்கள் எவற்றையெல்லாம் கடைப்பிடித்தார்களோ அவற்றையே இவர்களும் பின்பற்றினர். 'தோரா'வையே தொடர்ந்தும் வாழ்வின் வழிகாட்டியாக ஏற்றனர். ஓய்வு நாளை அனுசரித்தனர். வழிபாடுகளுக்காகத் தொடர்ந்தும் ஆலயத்துக்குச் சென்றனர். தங்களது பிள்ளைகளுக்கு எட்டாம்நாள் விருத்தசேதனம் செய்வித்தனர். குறிப்பிட்ட சில உணவு வகைகளை உண்ண மறுத்தனர்.

யூதர்களும், இயேசுவை விசுவசித்த யூதர்களுக்கும் அடிப்படையில் எவ்வித வேறுபாடும் இருக்கவில்லை. இயேசுவை விசுவசித்த யூதர்களை, ஏனையவர்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டும் சில பண்புகள் இருந்தன. இயேசுவை விசுவசித்தவர்கள் ஏனையவர்களைப் போன்று ஆலய வழிபாடுகளுக்குச் சென்றாலும் அவை முடிந்ததும் தனிப்பட்ட வீடுகளில் ஒன்றாகக்கூடி அப்போஸ்தலர்களின் போதனையைக் கேட்பதிலும், நட்புடன் உறவாடுவதிலும், அப்பம் பிட்குதலிலும் செபிப்பதிலும் நிலையாயிருந்தனர். இவைதான் புதிய நெறியைச் சார்ந்தவர்களை ஏனைய யூதர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது.

> தாய் உள்ளத்தில் இல்லாத கடவுள் வேறெங்கே இருக்கமுடியும்.
> — திரு. வி க.

## அன்பு விருந்து

அப்பம் பிட்குதல் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது. அதுவே அவர்களின் வாழ்வின் மையமாகத் திகழ்ந்தது. எப்பொழுது அப்பம் பிட்கும் நிகழ்ச்சியை நிறைவேற்றினார்கள். அதில் இராப்போசன விருந்தைப் போன்றதொரு நிகழ்ச்சியை நடத்தினர். அதை நிறைவேற்றும் போதெல்லாம் இயேசு தங்கள் மத்தியில் உயிரோடு இருப்பதை உணர்ந்தனர். அதன் மூலம் உயிர்த்த இயேசுவின் வல்லமையைப் பெற்றனர். சில சமயங்களில் அது அன்பு விருந்தெனவும் அழைக்கப்படுகின்றது.

## பிறரைக் கவர்ந்தவை

அன்பு விருந்தின் அனுபவமே அவர்களது மகிழ்ச்சியின் காரணமாக அமைந்தது. அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருந்தனரென்றால் தங்களிடம் உள்ளதை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழத் தொடங்கினர். பிறரை மகிழ்விப்பதிலேயே நிறைவான மகிழ்ச்சியை அடைந்தனர். உள்ளவன் இல்லாதவன் என்ற நிலை இருக்கவில்லை. சமத்துவம் நிலவியது. உடமைகள் மீது எவரும் உரிமை பாராட்டவில்லை. பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்தனர். பகைவர்களையும் மன்னிக்க முடிந்தது. எவ்வளவுதான் தடைகள், எதிர்ப்புக்கள் வந்தாலும் துணிவுடன் போதித்தனர். இயேசுவின் பெயரால், அவரது வல்லமையால் புதுமைகள் செய்யத் தொடங்கினர். இவையே பிறரைக் கவர்ந்த பண்புகளாகும்.

(தொடர்ச்சி 26 பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயம் பிரசுராலயத்தின் இரண்டாவது நூல்

## 'மஞ்சு நீ மழைமுகில் அல்ல'

# வெளியீட்டு விழா

கிழக்கிலங்கையில் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனை படைக்க முயலும் 'உதயம்' பிரசுராலயத்தின் இரண்டாவது வெளியீடாக, கவிஞர் திமிலைத்துமிலன் (எஸ். கிருஷ்ணபிள்ளை) எழுதிய 'மஞ்சு நீ மழைமுகில் அல்ல' என்னும் நாவல், கடந்த ஜூன் திங்கள் 16ம் நாள், மட்டக்களப்பு பொது நூலக மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மாலை 3.30 மணி அளவில் ஆரம்பித்த நூல் வெளியீட்டு விழாவிற்கு (விழா வென்ற பெரிய வார்த்தையைக் கேட்டு எக்கச்சக்கமான கூட்டம்என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். சுமார் முப்பது பேர் வந்திருப்பர்) மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. எஸ். கனகசூரியம் அவர்கள் தலைமை தாங்கினார். தலைமையுரையை, தொண்ணூற்றியொன்பதரை வீதம் நூலாசிரியருக்கு பாராட்டுரையாகவே வழங்கி முடித்துக் கொண்டார்.

வெளியீட்டாளர் திரு. சிவதாசன் அவர்கள் தமதுரையில், நூல் வெளியீட்டுத் திட்டத்துக்குக் கிழக்கிலங்கை வாசகர்களிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்கவில்லை என்று குறைபட்டுக்கொண்டார் திரு. அன்புமணி அவர்கள், முன்பு ஒருமுறை கூறிய ஐநூறு சந்தாதாரர் சேரா விட்டால் இலக்கியத்தைப் பற்றிப் பேசவே நமக்கு அருகதை இல்லை'' என்று கூறியதை நினைவூட்டிய அவர், (வாசகர்கள் கவனித்துக் கொள்ளவும்) 'தற்போது நூறு சந்தாக்கள் மட்டுமே சேர்ந்துள்ளது. ஆயினும் நாம் முன்பு கூறியதுபோல் ஆண்டுக்கு மூன்று நூல்களாக ஐந்து ஆண்டுகளுக்கு வெளியிடுவோம் என்று சூளுரைத்தார்.

அடுத்து, கருத்துரை வழங்கிய திருமதி சுபா சக்கரவர்த்தி அவர்கள்.

'உருவக ஒப்பீடு நாவலுக்குச் சிறப்புத்தருகிறது. மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ் இனிமை சேர்க்கிறது. மறைந்துபோகும் மட்டக்களப்பு பேச்சுத் தமிழை நாவல் மீட்டுப்பார்க்க வைக்கிறது. தற்காலப் பிரச்சினைகளைத் தொட்டுக்காட்டும் நாவலாக உள்ளது. என்று குறிப்பிட்ட அவர், 'அதிகமான சம்பவங்கள் பின்னிப் பிணைந்திருப்பது குழப்பத்தைத் தருகிறது' என்றும் கூறினார்.

வித்தவான் சா. இ. கமலநாதன் அவர்கள், 'நூலை வாசகர்கள் படித்து முடித்த பின்தான் சரியான விமர்சனம் உருவாகமுடியும். எனவே, இது விமர்சனமல்ல' என்று ஆரம்பித்தவர், 'புறக்கட்டுப் பாடுகளின்றி தனது ஆத்ம திருப்தியை முன்வைத்து, ஒரு நூலை — இலக்கியத்தை உருவாக்கும் படைப்பாளி தான் வெற்றிபெறுவான்' என்றும் 'ஜனரஞ்சகம் இல்லாத படைப்புக்கள் பிறந்த வீட்டிலேயே இறந்துவிடும்' என்றும் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில், 'பாரதி முதலில் பாடியது ஜனரஞ்சகப்பாடல்கள்தான். அதனால்தான் அவன் மக்கள் மனதில் இடம் பெற்றான். ஆற்றல் மிக்க கலைஞன் இதனூடாகவே வாழுகின்றான்' என்றார்.

வெளியிட்ட நூல்பற்றி அவர் பேசுகையில், 28 ஆண்டுகளுக்கு முந்திய வரலாற்றுப் பதிவுகளைக் குறித்திருப்பது புதிய தலைமுறையினர் அறிந்துகொள்ள உதவும் என்றும், கிராமியப் பாடல்களைப் பயன்படுத்தியிருப்பது இந்தப் போக்கில் ஏற்பட்ட முதிர்ச்சியைக் காட்டுகிறது' என்றும் குறிப்பிட்டார். ஆனால், அவரது உரை பெரும்பாலும் நாவலின் கதைப் போக்கையும் பாத்திரப்படைப்புகளின் தன்மையையும் கிண்டல் செய்வதாகவே அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலில் காணப்படும் திருப்பங்களும், நிகழ்ச்சி அமைப்புக்களும் சினிமாத்தனமானவை என்று குறிப்பிட்ட அவர் சிரிக்கச்சிரிக்கப் பேசிய நகைச்சுவையில் நையாண்டித்தனமே தலைகாட்டியதை அவதானிக்க முடிந்தது. (நூலைப்படித்த பின்தான் வித்துவானது கிண்டல் அர்த்தமுள்ள கிண்டல்தான் என்றுதெரிந்துகொண்டோம். இது நூல் விமர்சனம் அல்ல ஆதலால் இத்தோடு நிறுத்திக் கொள்வோம்)

அடுத்துப் பேசிய அன்புமணி அவர்கள், மட்டக்களப்பில் முதல் நாவல் 1935ம் ஆண்டு ஏரம்பமுதலி அவர்களால் எழுதப்பட்டது. அதன்பின் அரங்கநாயகி என்றொரு நாவல். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்குப்பிறகு தற்போது இரண்டு நாவல்கள் வெளிவந்துள்ளன. எழுத்தாளர்களும், கதாசிரியர்களும் நிறைந்துள்ள மட்டக்களப்பு இவ்வளவு நீண்டகாலம் என்ன செய்தது.'' என்று வினு விடுத்தார் தொடர்ந்து...

இலக்கியம் காலத்துக்குக் காலம் மாற்றம் அடைகிறது. அம்மாற்றத்தை இந்நாவலில் கண்டுகொள்ளலாம். யதார்த்தமான, சிறந்த படைப்பு என்று இதைச் சொல்ல வரவில்லை மட்டக்களப்புப் பேச்சு வழக்கில் அமைந்த உரை நடை ஜீவனுள்ளதாக இருக்கிறது. பேச்சு மொழிச்கு உயிர்த்துடிப்பும், வலிமையும் அதிகம் இருக்குமென்று குறிப்பிட்டார்.

நூலாசிரியர் திமிலைத் துமிலன் அவர்கள் பேசுகையில், நான் எழுதிய முதல் நாவல் இதுதான். இதற்குப் பின் நான் நாவலெதுவும் எழுதவில்லை. இதைப் படித்த பின் உங்களுடைய விமர்சனம் எனக்குத்தெரிவித்தால் நான் தொடர்ந்து எழுதுவதற்கு உதவியாயிருக்கும் என்று கூறினூர்.

மாநகர சபை ஆணையாளரின் சிற்றுரையை அடுத்து நன்றி உரையுடன் விழா முடிவுற்றது. விழாவுக்குக் கூட்டம் சேராததற்கு, நூல் வெளியீடு பற்றிப் பலரும் அறியாததும் ஒரு காரணம் என்று தெரிந்துகொண்டோம். வெளியீட்டு விழா பற்றிய விளம்பரமும் விற்பனைக்குத் துணையாகலாமல்லவா?

நூல் வெளியிடுவது எழுத்தாளர்களை உற்சாகப்படுத்துவது எல்லாம் நல்ல முயற்சி, பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனுல் நல்ல படைப்புக்களையும், இனங்கண்டு — தரங்கண்டு நூலாக்குவதும் அவசியம்தானே? இதில் தவறினுல் மட்டக்களப்பின் இலக்கியத்தரம் நகைப்புக்குரியதாகிவிடும் என்று நாவலை வாசித்த சிலர் பேசிக்கொள்கிறுர்களாம்.

✶

---

(24ம் பக்கத் தொடர்ச்சி)

## வினுக்கள்

1. பெந்தகோஸ்தே தினத்தன்று நடைபெற்ற சம்பவங்களை சுருக்கமாக எழுதுக?
2. பெந்தகொஸ்தே தினத்தில் எருசலேமில் நடந்த சம்பவம் ஆரம்பத் திருச்சபையின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியது என்பதை ஆராய்க.
3. புனித இராயப்பர் ஆற்றிய முதல் மறை உரையின் மையக் கருத்துக்கள் எவை?
4. அப்போஸ்தலர்களின் போதனையினுல் உருவான கிறிஸ்தவ சமுதாயத்தின் விசேட பண்புகள் என்ன?
5. யூதர்களும் புதிய நெறியைத் தழுவியவர்களுக்கும் இடையே காணப்பட்ட ஒற்றுமை, வேற்றுமைகள் எவை?
6. ஆதித்திருச்சபையின் துரித வளர்ச்சிக்குக் காரணம் அவர்களிடம் காணப்பட்ட சில பண்புகள் பிறரைக் கவர்ந்தன. அவை என்ன என்பதை ஆராய்க.
7. பெந்தகோஸ்தே சம்பவத்திஞல் பழைய ஏற்பாட்டின் எந்த நிகழ்ச்சி உமக்கு நினைவூட்டப்படுகின்றது? இதைச் சுருக்கமாக ஆராய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியப் புதிர் - 2

**பரிசு: ரூபா 50/-, 25/-.** **முடிவுத் திகதி: 30-7-88.**

---

*இறைவன் தம் மீட்புத் திட்டத்தில் பல மனிதர்களை ஒரு குறிப்பிட்ட பணிக்காகத் தேர்ந்து கொண்டார். அத்தகைய ஒரு சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் பழைய ஏற்பாட்டிலே காணப் படுகின்றனர். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். கீழே தரப்பட்டுள்ளவர்களின் பெற்றோரைக் கண்டு பிடித்து போட்டிக் கூப்பனில் நிரப்பி அனுப் புங்கள் அதிஸ்டசாலிக்குப் பரிசு உண்டு.*

---

| | | தந்தை | தாய் |
|---|---|---|---|
| 1. | மனுசேஸ் | ...................... | ...................... |
| 2. | தோபி | ...................... | ...................... |
| 3. | சூசை | ...................... | ...................... |
| 4. | சாமுவேல் | ...................... | ...................... |
| 5. | ஈசாக் | ...................... | ...................... |
| 6. | சாலமோன் | ...................... | ...................... |
| 7. | பத்துவேல் | ...................... | ...................... |
| 8. | யூதா | ...................... | ...................... |
| 9. | மோயிசன் | ...................... | ...................... |
| 10. | யாக்கோபு | ...................... | ...................... |

*முழுப் பெயர்:* ..........................................................................

*முகவரி:* ..........................................................................

..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி -- 49.
# முடிவுகள்

**இடமிருந்து வலம் -**

| | | | |
|---|---|---|---|
| 1. | எம்மாவுஸ் | 9. | அறை |
| 3. | ல் க (கல்) | 10? | சிர்ட (சீடர்) |
| 5. | லே வ (வலே) | 13. | தோட்டக்காரன் |
| 6. | விரல் | 14. | ன்றுசா (சான்று) |
| 7. | மீன் | 16. | எழும்பு |

**மேலிருந்து கீழ் -**

| | | | |
|---|---|---|---|
| 1. | எரேமியா (ஸ்) | 9. | அடக்கம் |
| 2. | மாலே | 11. | வீரன் |
| 4. | கல்லறை | 12. | நான்று |
| 6. | விலா | 16. | தோமை (யார்) |
| 8. | மறை | 15. | சாவு |

**பரிசு பெறுவோர் :**

முதலாம் பரிசு: - **ச. ஆனந்தவாசன்**
தாளங்குடா,
காத்தான்குடி.

இரண்டாம் பரிசு; **கிளேரா ஷீராணி ஜோண்**
60/11, திருமலே வீதி,
மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறுவோர்:**

1. ப. யூபிறேசியா, 60/11, புனித மரியாள் வீதி, திருகோணமலே.
2. செல்வராஜா ரஞ்சன், 92. தாமரைகேணி வீதி, மட்டக்களம்பு.
3. J. B. லொறற்ரு குருஸ், 167? டைக் வீதி, திருகோணமலே.
4. செல்வி. உதயதேவி ரூசை: சொறிக்கல்முனே, சம்மாந்துறை.
5. செல்வி. தனுந்தா கனகரெத்தினம், மைக்கல்ஸ் கிளினிக். வீச்சுக்கல்முனே - மட்டக்களப்பு.

பங்குபற்றியவர்கள் ;- 50. சரியான விடை அளித்தோர் :- 21.

அனேவருக்கும் எமது நன்றி.

குறிப்பு: போட்டி 50ல் இடமிருந்து வலம் 2 மேலிருந்து "கூழ் 7" ஆகிய இலக்கங்கள் பிழையாகத் தரப்பட்டிருந்தன. தவறுக்கு வருந்துகிறோம். அப்படியிருந்தும் பல போட்டியாளர்கள் குழப்பமடையாது சரியான விடைகளே எழுதியிருந்தனர். அவர்களேப் பாராட்டுகிறோம்.

(ஆ - ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி

# தன் கையே தன் கண்ணைக் குத்தலாமா?

இலங்கை நாடு, அதிலும் இலங்கைத் தமிழரது வாழ்வு ஓர் இருண்ட காலகட்டத்துக்குள் தடுமாறிக் கொண்டிருக்கிறது, இதனுல் தானே என்னவோ இப்போதெல்லாம் எதிரியார்? எம்மவன் யார்? தொண்டன் யார்? துரோகி யார்? என்ற வேறு பாடே இல்லாமல் பச்சைக்கொலைகள் இங்கு நடந்தேறிக்கொண்டிருக்கின்றன.

கடந்த ஜூன் திங்கள் 6ம் நாள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பிரஜைகள் குழுவின் தலைவரும், கத்தோலிக்க குருவுமான அருள்திரு. சந்திரா பெர்ணுண்டோ அடிகள் படுகொலை செய்யப்பட்டார்.

இத்தனைக்கும் இவர் கிறீஸ்துவின் வழியில் நடைபோட்ட ஒரு துறவி. கிழக்கு மாகாணத்தின் தலைமகனுய், விடிவெள்ளியாய், தமிழ் மக்கள் நலனுக்காய் தன் வாழ்வையே அர்ப்பணித்த தலைவன். மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தலைவர்களாக வந்தவர்கள் அரை மந்திரியாய் முழு மந்திரியாய், முக்கால் மந்திரியாய் தலை நகரில் சொகுசாகக் குளிர்காய்ந்து கொண்டிருக்கும்போது, மக்களது பிரச்சினைகளை எல்லாம் தன் பிரச்சினையாய்க்கொண்டு சுமந்து நின்ற சுமைதாங்கி, எம் மக்கள் எம் மவர்களாலும், எதிரிகளாலும் அடிபட்டு, உதைபட்டு, சூறையாடப்பட்டு கைது செய்யப்பட்டு அந்தரித்து நின்ற வேளைகளிலெல்லாம் ஆதரித்து, ஆறுதல் தந்து, அநீதியை எதிர்த்து அஞ்சாது குரல் கொடுத்த வீரன். இனங்களுக்கிடையிலான மோதலின் போதெல்லாம் இணைப்புப் பாலமாக நின்று அமைதியை ஏற்படுத்திய அண்ணல்.

இத்தகைய பெருமகனை, அனைவருமே கொண்டாடும் திருமகனை ஏன் கொன்ருர்கள்? இதன் மூலம் இவர்கள் சாதித்தது என்ன? இந்தப் பச்சைக் கொலைக்குப் பின்னுல் பதுங்கி இருக்கும் சக்திகள் எவை? திட்டவட்டமாக எதுவும் சொல்லத் தெரியவில்லை. ஆனுல் இந்தப் பாதகச் செயலைப் புரிந்தவர்கள் எங்கிருந்தோ வந்தவர்கள் அல்ல. எதிரிகளல்ல என்று அறியும்போது நெஞ்சு விம்முகிறது, மூச்சு முட்டுகிறது. தன் கையே தன் கண்ணைக் குத்தலாமா? நம் தலையில் நாமே மண் அள்ளிப் போடலாமா? ஒன்று மட்டும் தெரிகிறது, இவர்கள் மக்களுக்கு நன்மை செய்பவர்கள் அல்ல. மக்களின் நண்பர்களுமல்ல. இவர்கள் சுட்டுக்கொன்றது சந்திரா என்னும் ஒரு மனிதனை அல்ல. கிழக்கு மாகாணத்தின் நம்பிக்கையை, ஆறுதலை அமைதியை, எந்தமிழ் மக்களது வாழ்வையே சுட்டுப் பொசுக்கிவிட்டார்கள்.

அண்மைக்காலமாக கிழக்கு மாகாண மக்களது தலைவர்கள் ஒன்றன்பின் ஒன்ருக அழிக்கப்பட்டு வருவதைப் பார்க்கும்போது இது திட்டமிட்ட தமிழ் இனஅழிப்பின் பிறிதொரு வடிவமோ என்று ஐயுற வேண்டி உள்ளது. எதுவாக இருப்பினும் இது அப்பட்டமான அநீதி. எமது சமூகத்துக்கு இழைக்கப்படும் பாரிய துரோகம் என்பதைச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

நடந்து முடிந்தது ஒரு நாசச் செயல். பாதிக்கப்பட்டவர் ஒரு கிறீத்தவக் குரு. கிறீத்தவ சமூகம் என்ன செய்கிறது?

ஆண்டவனைப் பிரார்த்தித்து அமைதி அடையப்போகிறதா?

பகைவனை மன்னித்து சாந்தி அடையப் போகிறதா?

பகைவனுக்காக மன்ருடிய யேசு பரிசேயரைக் கண்டிக்கத் தவறவில்லை.

சுமைகளைப் பசிர்ந்துகொண்ட யேசு சுமத்தியவர்களை எச்சரிக்கப் பின்வாங்கவில்லை.

தந்தையிடம் மன்ருடிய யேசு தவறு செய்த தலைவர்களைத் தட்டிக்கேட்க அஞ்சியதில்லை.

''என்மீது குற்றமுண்டென்ருல் எதுவென்று காட்டு. இல்லை என்ருல் ஏன் என்னை அடிக்கிருய்?''

இது கிறீஸ்துவின் கேள்வி.

கிறீத்தவ சமூகத்தின் கேள்வி என்ன?

- எம். வீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்தோம்

சித்திரை - வைகாசி மாத இதழில் விஞ்ஞான அறிவை வளர்த்த... எனும் பகுதி மூலம் அறியாத பலதை அறியக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக என் நன்றிகள்.

A. தயா,
கோமாரி.

## நினைக்கத் தெரிந்த மனமே....

சமரசம் உலாவும் இடமே பாடலைப் பாடிய சீர்காழியைத் தொண்டன் நினைவு கூர்ந்தமை பாராட்டுக்குரியதே!

தலைவர்,
இ. பெ. ந. சங்கம்
ஒல்லிக்குளம்.

## என்ன பாவம் செய்தோம்?

அண்மைக் காலமாகத் தொண்டனில் இடம்பெறும் சிறுகதைகள் எல்லாம், பயங்கரவாதி, இராணுவ அடாவடித்தனம் சுற்றிவளைப்பு இவைகளையே கருவாகக்கொண்டு அமைகின்றன. ஏன் எழுத்தாளர்களுக்கு வேறு கருப்பொருள் கிடையாதோ? வாசகர்கள் நாம் என்ன பாவம் செய்தோம்!

கலிஸ்ரா அருளப்பு,
அம்பாரை.

## காலத்திற்கொவ்வாத கதை

உயிர்ப்பு விழாச் சிறப்பிதழில் 'யார்' அந்த ஜோதி? ஆய்வுக்கட்டுரை மிகச் சிறந்த முறையில் அமைந்திருந்தது. பாராட்டுக்கள்!

'இழப்பு' சிறுகதை காலத்திற்கு ஒவ்வாதது. எந்தப் பெண்ணும் கணவன் பணம் கேட்டால் கணவனின் அனுமதியின்றி கருத்தடை சிகிச்சை செய்ய விரும்புவாளா? அதுமட்டுமின்றி கணவனின் நேரடிச் சம்மதத்துடன்தான் வைத்தியர்கள் செயலில் இறங்குவர். இது தெரியாதா கதாசிரியருக்கு?

ஜே. அருளப்பு,
புதுக்குடியிருப்பு.

## நோக்கம் என்ன

குறுக்கெழுத்துப் போட்டிக்காக விவிலியத்தை வாசிக்க வேண்டுமா? இல்லை விவிலியத்தை வாசித்து நன்றாக மனதில் பதிய வைத்துப் பயன் பெற வேண்டுமா? எது உங்கள் நோக்கம்?

விவிலியத்தை நன்றாக அறியவைக்க வேண்டும். மனதில் அது நிலை நிற்க வேண்டும் எனக் கருதினால் போட்டிக்காக வாசிக்கப்படும் பகுதி நன்றாகக் குறைந்தால் அதனால் நன்மையுண்டு.

குறிப்பாக விவிலியத்தில் ஒன்று அல்லது இரண்டு பக்கங்களை உள்ளடக்கியதாக இருத்தல் நலமாகும் போட்டியில் பங்கு பற்றும் அனைவருக்குமா பரிசு கொடுக்கிறீர்கள்?

J. J. இராஜரெத்தினம்,
திருகோணமலை.

இப்பிரசுரம் மட்டக்களப்பு, புனித யோசப் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு, தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 11-07-88ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org